

Vol.28 | No. 10 | October 2024

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



## *Disaffiliation and the Untiring Love of Jesus*



First Holy Communion and Parish Feast,
September 28, 2024, Marthandam



First Holy Communion and Pastoral visit,
September 22, 2024, Christurajapuram



Our Lady's Nativity Celebration
September 08, 2024, O Kovilpatti, Virudhunagar

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 28 No :10 OCTOBER 2024



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 10 |
| மறைக்கல்வி | 14 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 15 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 16 |
| மிஷன்லீக் இயக்கம் | 17 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 18 |
| இல்வாழ்வு இயக்கம் | 26 |
| புனித வின்செண்ட் தே பவுல் சபை | 28 |
| மரியாயின் சேனை | 31 |
| மறைமாவட்ட செய்திகள் | 33 |
| தென்காசி மறைபரப்புதளம் | 33 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 34 |
| மறைவட்ட செய்திகள் | 35 |
| MONTHLY AGENDA – AUGUST 2024 | 48 |
| BISHOP'S ENGAGEMENTS AUG 2024 | 51 |

## Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Associate Editors
**Mr. S.M. Edwinson**
**Fr. Antony Thakidiyel**
**Mr. Iyathurai**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Mary Jency**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/162/2024**

Dear Readers, 30 September 2024

Greetings and prayerful wishes from Bishop's House, Thuckalay!

I write to you today with a heavy heart, yet with hope and determination, to address a concerning trend affecting our Eparchy and the universal Church. When I go for pastoral visits, I see a decline in the number of people attending the Church. While discussing the issue with the parish council members, they told me that some families left the Church and joined other denominations. Some of them leave the Church even after the intervention of their respective parish priests. I remember discussing this particular issue with you during the batch-wise priests' meeting. This exodus is not merely a matter of changing attendance numbers;it represents a profound challenge to our pastoral mission and the spiritual well-being of the flock entrusted to our care.

As shepherds of Christ's Church, we are called to feed his sheep and tend his lambs. Today, more than ever,this sacred duty requires our utmost attention and concerted effort. In this letter, I want to explore the reasons behind this phenomenon, suggest measures to prevent it, and discuss how we, as priests, can be more vigilant in nurturing and retaining our flock within the embrace of the Catholic Church. Let us approach this challenge with the wisdom of serpents and the innocence of doves, guided by the Holy Spirit and rooted in Christ's love for his Church.

What are the possible reasons for Catholics leaving the Church and joining other denominations? Let us pinpoint at least some of them.

## Spiritual and Pastoral Factors

One of the primary reasons we see Catholics leaving for other denominations is a perceived lack of spiritual fulfilment within

our parishes. Many of our faithful seek more engaging worship experiences that speak to their hearts and souls. They yearn for a deeper, more personal relationship with God that feels immediate and transformative. We must ask ourselves if our liturgies and pastoral approaches are truly meeting these spiritual needs or if they have become routine and disconnected from the lived experiences of our parishioners.

Moreover, inadequate pastoral care has left many isolated and unsupported, especially during critical life transitions or personal crises. When our faithful face challenges such as loss, illness, or major life decisions,they need to feel the embrace of their Church community and the guidance of their pastors. If they perceive a lack of support or understanding during these crucial moments, they may seek comfort elsewhere, often in communities offering more personalised attention and emotional support.

## Doctrinal and Theological Issues

Disagreement with or misunderstanding Church teachings is another significant factor driving Catholics to other denominations. In an age of widespread information and diverse viewpoints, many of our faithful struggle to reconcile certain Catholic doctrines with their personal beliefs or societal norms. Some are attracted to denominations that offer simpler or more liberal theological interpretations, which they perceive as more aligned with their worldview or moral judgments.A general lack of understanding of Catholic traditions and practices exacerbates this trend. Insufficient catechesis and faith formation have left many Catholics ill-equipped to appreciate the depth and richness of our faith. Without a solid foundation in Catholic theology and tradition, our faithful may find themselves swayed by arguments or interpretations that seem more accessible or appealing on the surface.

## Social and Cultural Influences

The increasing secularisation of society presents a formidable challenge to our Church. As religious influence in public life declines, our faithful are constantly exposed to competing worldviews and

value systems that often contradict Catholic teaching. This cultural shift can erode faith and make the Church's claims seem less relevant or credible in the eyes of some believers.

Furthermore, the influence of family and friends must be considered. Mixed-faith marriages or relationships can lead to a gradual drift away from Catholic practice, especially if the non-Catholic partners are more active in their faith community. Among youth and young adults, peer pressure and the desire to fit in with friends from other denominations or secular backgrounds can be a powerful force drawing them away from their Catholic roots.

**Institutional Challenges**

We must also confront the painful reality that Church scandals, particularly those involving abuse and subsequent coverups, have deeply shaken the faith of many Catholics. Needless to say, the ongoing disagreements about celebrating Holy Qurbana in our Syro-Malabar Church can cause scandal for our faithful. These events have led to a profound loss of trust in Church leadership and disillusionment with institutional structures. Many of our faithful struggle to reconcile their love for the Church with the human failings of some of its members and leaders.

Additionally, some perceive the Catholic Church as overly rigid or lacking adaptability in the face of changing social norms and cultural shifts. This view can lead people to seek out faith communities that they perceive as more flexible or in tune with contemporary issues and lifestyles.

Having identified some of the causes of the departures, let us consider some preventive measures that can arrest this trend in our Eparchy.

**Enhancing Spiritual Life and Worship**

To address the spiritual hunger of our faithful, we must commit ourselves to revitalising our liturgical celebrations. This involves fostering active participation and deeper engagement in the Holy Qurbana and other sacraments. We should strive to improve the quality of our sermons, ensuring that they address our parishioners'

real-life concerns and spiritual needs. The homilies should connect the Word of God to our life situations. Enhancing our music ministry can also contribute significantly to creating a more engaging and uplifting worship experience.

Beyond the liturgy, we must promote a culture of prayer and contemplative practices within our parishes.Offering retreats, establishing prayer groups, and providing opportunities for spiritual direction can help our faithful develop a richer interior life. Encouraging Eucharistic adoration and Marian devotions can also deepen their connection to Catholic spirituality and traditions.

**Strengthening Catechesis and Faith Formation**

We must develop comprehensive, age-appropriate faith education programmes to combat confusion and strengthen faith. These should focus not only on explaining Catholic doctrine but also on addressing common misconceptions and questions. Our catechesis should equip the faithful to understand and articulate their faith in the face of challenges from secular society and other religious perspectives.

In this digital age, we must use modern media and technology for faith formation. Creating online resources,podcasts, and engaging social media content can reach our faithful where they are, especially the younger generations. Virtual faith-sharing groups and online Bible studies can provide additional learning and community building avenues.

**Building Vibrant Parish Communities**

Our parishes must become beacons of welcome and inclusion. We should develop ministries catering to various life stages and needs, ensuring every community member feels, seen and valued. Encouraging the active participation of small faith communities (Uraviam) and support groups within the parish can provide he sense of belonging and personal connection many seek.

Promoting active lay participation is crucial in building a vibrant parish life. We must empower lay leaders and volunteers, recognising their gifts and allowing them to take ownership of

various aspects of parish life. Developing strong parish councils and ministry teams can create a sense of shared responsibility and mission among our faithful.

**Addressing Social and Cultural Challenges**

To counter the effects of secularisation, we must engage in meaningful dialogue with the broader culture.Organising forums on faith and contemporary issues can help our faithful see the relevance of Catholic teaching to modern life. Participating in interfaith and ecumenical activities can broaden understanding and strengthen our Catholic identity through respectful engagement with others.

Supporting families in faith transmission is vital. We should offer robust marriage preparation and enrichment programs that emphasise the role of faith in family life. Providing resources and guidance for parents to nurture faith at home can ensure that Catholic values and practices are reinforced in daily life.

**Improving Institutional Transparency and Accountability**

To rebuild trust, we must implement best practices in church governance. This includes ensuring financial transparency and ethical management at all levels of the Church. Involving the laity in decision-making processes can also help restore confidence in our institutions.

We must continue to address scandals and misconduct proactively and with utmost seriousness. Establishing clear protocols for reporting and investigation and providing compassionate pastoral care for those affected by abuse are essential steps in healing wounds and preventing future transgressions.

The priests are crucial in preventing departures as they live closer to the people in the different parishes and institutions. As pastors of souls, they have a bounden duty to be watchful and alert in identifying such occurrences and taking proactive measures to block them.

**Pastoral Vigilance**

As priests, our role in preventing the exodus of our faithful is crucial and multifaceted. First and foremost, we must cultivate personal relationships with our parishioners. Regular home visits and one-

on-one conversations allow us to know our flock intimately, tounderstand their joys and struggles, and to be attuned to signs of disengagement or doubt. Being present and accessible, we can address concerns before they lead to alienation from the Church.

Providing compassionate spiritual guidance is at the heart of our priestly ministry. We must be ready to offer counselling and support during life challenges, addressing doubts and questions with patience and wisdom. Our role is to accompany our faithful through the complexities of life, helping them to see how their faith can be a source of strength and guidance in all circumstances.

**Leading by Example**

Our personal witness is perhaps our most powerful tool in retaining and inspiring our flock. Maintaining a strong personal prayer life and spiritual discipline is essential. When our parishioners see in us the joy and fulfilment that comes from deep Catholic faith, it can be a compelling argument against leaving the Church. Sharing our faith journeys, including our struggles and moments of grace, can help others navigate theirspiritual paths.

Continual formation and education are also vital. We must stay informed on current theological and pastoral issues. Attend retreats and workshops to enhance our knowledge about the Church and grow spiritually. A priest who is actively growing in faith and knowledge is better equipped to guide others and address the complex questions of our time.

**Collaborative Ministry**

Effective ministry in today’s Church requires collaboration. We must work closely with lay leaders and volunteers, delegating responsibilities and empowering others to serve. This approach lightens our load and fosters a sense of shared mission and ownership within the parish community. When people feel they have a stake in the Church, they are less likely to leave it.

Networking with other parishes and Eparchial offices can provide valuable resources and ideas. Sharing best practices and coordinating larger-scale initiatives can create a sense of unity and dynamism that extends beyond individual parish boundaries.

## Outreach and Evangelization

We must be proactive in reaching out to lapsed Catholics. Organising "Come Home" or "Back to Church" campaigns and events can provide a welcoming pathway for those who have drifted away. It is important to create a non-judgmental process for returning Catholics, one that acknowledges their journey and warmly reintegrates them into the community.

Finally, we should equip our active parishioners for evangelisation. Offering training in sharing faith and answering common questions can turn our faithful into effective ambassadors for the Church. Encouraging and supporting lay-led outreach efforts can multiply our impact and create a culture of active faith-sharing within our communities.

Dear Fathers, the challenge before us is significant but not insurmountable. The exodus of Catholics to other denominations calls us to renew our commitment to vibrant, engaging, and deeply spiritual ministry. It is an opportunity for us to examine our practices, strengthen our communities, and deepen our own faith and that of our flock.

Let us approach this task with hope and determination, knowing Christ guides and strengthens his Church. I encourage you to reflect on the ideas presented in this letter and engage in ongoing dialogue with your brother priests, parishioners, and diocesan leadership as we address this challenge.

Remember, each soul in our care is precious to God. Let our every action and decision be guided by love -love for God, love for His Church, and love for the people entrusted to our care. Through our faithful service and the grace of God, may we not only stem the tide of Catholics leaving the Church but also ignite a renewal that draws many back to the fullness of faith in the Catholic tradition.

I assure you of my prayers and support as we undertake this important work together. May Our Lady,Mother of the Church, intercede for us and for all those we serve.

**CONCLUSION**

October is the month of the mission, although our Syro-Malabar Church normally celebrates it at the beginning of every year. While praying for all the missionaries and financially supporting them through our collections, let us make ourselves worthy missionaries of Christ. We are entering the month of the holy rosary. The holy rosary holds significant importance in the lives of Catholic priests, serving as a powerful tool for prayer, meditation, and spiritual growth. This devotional practice centred around the life of Jesus Christ and the Blessed Virgin Mary, provides a structured method to deepen our faith and strengthen our relationship with God. By regularly praying the rosary, we can reflect on the mysteries of Christ's life,death, and resurrection, which informs and enriches our pastoral ministry. The rosary also provides comfort and guidance during challenging times, offering a means to seek mediation from the Virgin Mary. As spiritual leaders, we need to encourage our parishioners to embrace this devotion, making it an essential aspect of their role in fostering the faith of their community. Let us solemnise the devotional practices we have chalked out for this month so that our people are spiritually enriched in praying for the rosary. May they come closer to Jesus and Mary!

May our Blessed Mother intercede for each one of us!

Yours in Christ Jesus,

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

† George Rajendran SDB
Bishop of Thuckalay

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

---

## Circular letter No/GR/56/2024

ஈசோமெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு வின்செந்தியர்களே மற்றும் இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

புனித வின்சென்ட் தே பவுல் சபை நிறுவனரான அருளாளர் பிரடெரிக் ஓசானாமின் திருநளை செப்டம்பர் 9-ஆம் நாளிலும் சபையின் விண்ணகப் பாதுகாவலரான புனித வின்சென்ட் தே பவுலின் திருநாளை செப்டம்பர் 27-ஆம் நாளிலும் அகில உலக கத்தோலிக்கத் திருச்சபையானது ஒவ்வொரு ஆண்டும் சிறப்பிக்கிறது. அந்த வகையில் நமது மறைமாவட்டமும் தொடர்ந்து வருகின்ற செப்டம்பர் 29-ஆம் நாள் நமது ஆலயங்களில் பங்கு மக்கள் அனைவரோடும் இணைந்து அந்த நாளை சிறப்பிக்கின்றோம். இத்தருணத்தில் பிறரன்புப் பணியாற்றும் நம் மறைமாவட்ட மக்கள் ஒவ்வொருவருக்கும் திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். வின்செந்தியர்கள் அனைவரும் பங்குதந்தை மற்றும் பங்கு மக்களோடு இணைந்து நற்செயல்கள் செய்து புனிதமிக்க நாளாக அந்நாளை மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1581 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் பிரான்ஸ் நாட்டில் பூய் என்னும் சிற்றூரில் பிறந்த வின்சென்ட் தே பவுல் 1600 செப்டம்பர் 13-ஆம் நாள் குருப்பட்டம் பெற்றார். அவரது பணி வாழ்வும் ஏழைகள் மீதுள்ள கரிசனையும் அவரது வாழ்வுக்குப் பின் புனித நிலைக்கு உயர்த்தியது. மட்டுமல்ல 150 நாடுகளுக்கும் மேலாக பரந்து விரிந்து செயல்படும் பிறரன்பு பணியாளர்களின் சபையின் விண்ணகப் பாதுகாவலராகவும் மாற்றியது.

### சபையின் தொடக்கம்

"மனிதர் நம்பிக்கையினால் மட்டுமல்ல செயல்களினாலும் கடவுளுக்கு ஏற்புடையவராகிறார்" (யாக் 4:24) என்னும் இறைவார்த்தை செயல்வடிவம் பெற 1833 –ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ல் பிரான்ஸ் நாட்டில் 20 வயதுடைய பிரடெரிக் ஓசானாம் என்னும் சட்டக்கல்லூரி மாணவரால் 'தருமசபை' என்னும் பெயரில் பிறரன்பு பணியாளர்களின் சபை உருவானது. இதில் 6

இளைஞர்கள் இணைந்து 40 வயதான இம்மானுவேல் பெய்லி என்பவரின் வழிகாட்டுதலுடன் தோன்றிய அச்சபை 1834-ஆம் ஆண்டு பிப்ரவரி 7-ம் நாள் பிறரன்பு பணியாளர்களின் பாதுகாவலரான புனித வின்சென்ட் தே பவுல் பெயரில் மாற்றம் பெற்று இன்றளவும் மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இன்று இச்சபையில் 8 இலட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் பிறரன்பு பணிபுரிவதைக் கண்டு பெருமை கொள்வோம். தினம் தோறும் இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களின் துயர் துடைத்து பொது நிலையினரின் தலைமையில் செயல்படும் இவ்வுலகளாவிய சபையில் உறுப்பினர்களாக இணைந்து செயல்படும் ஒவ்வொரு பிறரன்பு பணியாளர்களையும் இச்சபையின் திருநாளில் மனதாரப் பாராட்டி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குமரி மண்ணில் முதல் கிளைச்சபை

1963-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ம் தேதி அருட்தந்தை தாமஸ் வீட்டுவேலிக்குன்னேல் அடிகளாரின் சீரிய முயற்சியால் சூசைபுரம் பங்கில் காலஞ்சென்ற சட்டமன்ற உறுப்பினர் திரு. கபிரியேல் நாடார் தலைமையில் குமரி மண்ணில் சபையின் அனுமதியோடு தொடங்கப்பட்ட அதிகார பூர்வமான முதல் கிளைச்சபை உருகொண்டது. தக்கலை மறைமாவட்டம் உருவானபின்பு 12.12.1997 அன்று “தக்கலை மத்தியப் பேரவை” உருவானதையும் நீங்கள் அறிவீர்கள். இன்றைய நாளில் சுமார் 90 கிளைச்சபைகள் நமது பங்குகளில் செயல்படுவதை எண்ணி மகிழ்ச்சி கொள்வோம். இதுவரை கிளைச்சபைகள் தொடங்காத பங்குகளில் விரைவில் தொடங்க மத்திய பேரவையினர் ஆர்வம் காட்ட வேண்டும் என்றும் அனைத்து கிளைச்சபைகளும் பெயரளவில் செயல்படாமல் தாங்கள் ஏற்ற அழைப்பிற்கு ஏற்ப சபை சட்டத்திட்டங்க்ளுக்கு உட்பட்டு அனைத்து உறுப்பினர்களும் பிறரன்பு பணிபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## மத்திய பேரவையின் பணிகள்

தக்கலை மத்திய பேரவை முன்னெடுத்துவரும் கல்வி உதவித்திட்டம், ஜூபிலோன் கடனுதவித் திட்டம், சுயதொழில் கடனுதவி திட்டம் போன்ற திட்டங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பிறரன்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் ஒத்துழைப்பு வழங்கிடவும் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 2-ம் தேதி “தேசத்தோடு ஒரு நாள்” என்ற மையச்சிந்தனையில் கடந்த 25 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுவரும் “துப்புரவு பணியினை” இவ்வாண்டு இடைக்கோடு அரசு மருத்துவமனையில் நடத்த திட்டமிடப் பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி கொள்வதோடு இயன்றவர்கள் அனைவரும் தூய்மை பணியில் கலந்து கொள்ளவும் அறிவுறுத்துகிறேன்.

மத்தியப் பேரவையின் ஓர் அங்கமாக சிறப்புடன் செயல்படும் உத்திரம்கோடு ஓசானாம் உயர்கல்வி நிலையத்தில் நடைபெறும் டோன் போஸ்கோ தொழில்நுட்பகல்வி (DB Tech) என்ற அரசு சார்பு பயிற்சியின் கீழ் நடத்தப்படும் வேலைவாய்ப்புப் பயிற்சியிலும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக தொலைநிலை கல்விதிட்டத்தில் பல்வேறுப் பாடப்பிரிவுகளில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளும், இவை தவிர கணிணி, தட்டச்சு, தையல் மற்றும் ஆரி வேலைப்பாடு தொடர்பான பயிற்சிகளும் நன்முறையில் நடைபெற்று வருகிறது. இதனை மறைமாவட்ட மக்கள் பயன்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

## ஆசாரிப்பள்ளம் வான் (VAAN) திட்டம்

"நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்"; (பிலிப் 2:4) என்னும் இறைவார்த்தைக்கேறப் நோயாளிகள் மற்றும் அவர்களை பராமரிப்பவர்கள் பயன்பெறும் வண்ணம் உருவாக்கப்பட்டதே "விடியல் அருள் அவை நடுவம் (VAAN) திட்டம்.

ஆசாரிப்பள்ளம் மாவட்ட மருத்துவக் கல்லூரியின் மேற்கு திசையில் அமைந்துள்ள காவல் நிலையத்திற்கு அருகில் 28.02.2012இல் சுமார் 7 சென்ட் நிலம் வாங்கப்பட்டு அதில் 3000 சதுர அடியில் ஒரு கட்டிடம் மத்திய பேரவையின் வெள்ளி விழா நினைவாக வின்செந்தியர்களின் உதவியால் கட்டப்பட்டது. அக்கட்டிடம் 11.12.2022 இல் ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டதை நீங்கள் அனைவரும் அறிந்ததே. அதற்காக உதவிய ஒவ்வொருவரையும் மறைமவாட்டம் சார்பில் நன்றியுடன் நினைவு கூருகிறேன். மேலும், அதன் செயல்பாட்டிலும் உங்கள் ஒவ்வொருவரின் உதவியும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என்பதையும் நினைவுபடுத்துகிறேன். நாம் இணைந்து பணி செய்தால்

இதுபோன்ற பல நற்செயல்கள் நம் மறைமாவட்ட மக்களுக்காக இன்னும் செய்ய இயலும் என்பதற்கு இதுவும் சான்றாக அமைகிறது.

இவ்வாண்டு இறுதியில் நமது மறைமாவட்டம் வருகை தர இருக்கும் நமது மேனாள் ஆயரும் மேனாள் உயர்பேராயருமான கர்த்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களின் வருகையின் போது ஆசாரிபள்ளம் வான் திட்டத்தை செயல்வடிவம் கொடுக்க நீங்கள் எடுத்திருக்கும் முயற்சி வெற்றியடைய நானும் உங்களோடு இணைந்து செபிக்கிறேன்.

“அன்பு என்பது சொற்களில் வாழ்வதில்லை; அன்பை சொற்களால் விளக்கவும் முடியாது செயல்களால் விளக்கம் பெறுகிறது அன்பு” – என்ற புனித அன்னை தெரசாவின் பொன்மொழிகளுக்கு ஏற்ப தங்களது வின்செந்திய பணிவாழ்வில் 25 மறறும் 50 ஆண்டுகள் நிறைவு செய்தவர்களையும் 70-வயதைக் கடந்து வின்செந்திய பணியினை தொடர்ந்து சிறப்பாக ஆற்றிவரும் மூத்த வின்செந்தியர்களையும் *14.07.2024* அன்று நித்திரவிளை ஜெயமாதா ஆலயத்தில் நடைபெற்ற மத்தியப் பேரவை ஆண்டு விழாவில் கௌரவித்ததை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களது பணி வாழ்வு இளைய தலைமுறையினருக்கு முன்மாதிரியாக அமையட்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

மேலும், நமது மறைமாவட்டம் மதுரை வரை விரிவாக்கம் செய்யப்பட்டதையும் அங்கு மறைப்பரப்பு பணியாளர்களின் தேவை இருப்பதையும் நீங்கள் அறிந்ததே. அந்த இடங்களில் மறைபரப்பு ஆர்வம் உள்ளவர்களும் குறிப்பாக வின்செந்தியர்களும் தங்கள் பணிகளை மேற்கொண்டு புதிய திட்டங்கள் தீட்டி செயல்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதுபோல புதிய உறுப்பினர்களை சபையில் சேர்ப்பதும், குறிப்பாக இளையோரை வின்செந்திய பிறரன்பு பணிகளில் இணைத்துக் கொள்வதும் இன்றைய காலகட்டத்தில் அவசியம் என்பதை உணரவேண்டும். வின்செந்திய செயல்பாடுகளில் ஆன்மீக ஆலோசகரின் வழிகாட்டுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும், வெளிநாட்டு உதவிகள் குறைந்து வரும் இக்சூழலில் உள்ளூர் நன்கொடைகள் திரட்டுவதில் கூடுதல் கவனம் செலுத்தவும் வேண்டும். மேலும் வின்செந்தியர்கள் தங்களது சபை பாதுகாவலர் விழாவை ஆலயத்தில் கொண்டாடும்நாள் ஞாயிறு காணிக்கையினை பங்குதந்தையிடமிருந்து பெற்று பங்கில் செயல்படும் கிளைச்சபைகளின் பிறரன்பு பணிக்காக பயன்படுத்தவும் கேட்டுக் கொள்கிறேன்.

வின்செந்திய பிறரன்பு பணி வாயிலாக இறையரசை கட்டியெழுப்பவும் இறை இயேசுவின் சாட்சிகளாக வாழவும் முயலுவோம். இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் உங்கள் பிறரன்பு பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

**ஆயர் இல்லம்**
***18.09.2024***

**† மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**



# CATECHISM
# மறைக்கல்வி

> "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
> (மாற் 16:15)

---

**"அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும் கிறிஸ்துவை பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதை கேட்க வாய்ப்புண்டு" (உரோமையர் 10: 17)**

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

## ஆசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி வகுப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா

நமது மறை மாவட்ட மறைக்கல்வியின் மஞ்சாலுமூடு மறைவட்ட ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி மற்றும் வகுப்பு (BTCT Course) முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா 2024 செப்டம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2 மணிக்கு மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் ஆலய அரங்கில் வைத்து நமது குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஷி குளத்திங்கல் அவர்கள் தலைமையிலும் மஞ்சாலுமூடு மறை வட்ட இயக்குனர் அருட்தந்தை ஜார்ஜ் கண்டத்தில் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வின் துவக்கமாக தூய ஆவியார் பாடல் அனைவராலும் சேர்ந்து பாடப் பட்டது. தொடர்ந்து பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தூய ஆவியின் செயல்பாடுகள் பற்றி மிக சிறப்பாக தகுந்த தயாரிப்புடன் வகுப்பு நடத்தினார். தொடர்ந்து அடிப்படை பயிற்சி வகுப்பு முடித்த ஆசிரியர்களுக்கு ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை அவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார் இப்பயிற்சி வகுப்பில் மஞ்சலூமூடு மறைவட்ட மறைக்கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இப்பயிற்சி வகுப்பு பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பை ஒருங்கிணைத்து வழி நடத்தியவர் மஞ்சலூமூடு மறை வட்ட இயக்குனர் அருட்தந்தை ஜார்ஜ் கண்டத்தில் அவர்கள்.

### நன்றிகள்

மஞ்சலூமூடு மறை வட்ட ஆசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி வகுப்புகள் (BTCT Course ) மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அந்த மறைவட்ட அருட்தந்தையர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் வகுப்புகள் நடத்திய அனைத்து அருட்தந்தையர்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.

***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற***
***இணை இயக்குனர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குனர்***

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**என் நெஞ்சம் நிறைவும் அமைதியும் கொண்டுள்ளது. தாய்மடி தவழும் குழந்தையென என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாயுள்ளது** (திபா 131, 2).

அன்பார்ந்தவர்களே,

ஆகஸ்ட் மாதம் 29ஆம் தேதி புனித எவுப்பிராசியம்மாவின் திருநாள் கொண்டாடப்பட்டது. அதனை கருத்தில் கொண்டு செப்டம்பர் மாதம் குழந்தைகளுக்கு புனித எவுப்பிராசியம்மாவின் வாழ்க்கை வரலாற்றை குறித்து கற்று கொடுக்க பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் இம்மாத செயல்பாடாக புனித எவுப்பிராசியம்மாவின் குழுப்பாடல் கொடுக்கப்பட்டது. குழந்தை ஈசோ இயக்கத்தை சார்ந்த குழந்தைகள் அனைவரையும் ஒருங்கிணைத்து பாடல் பயிற்றுவித்து குழுப்பாடலை video எடுத்து அந்தந்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் இறையன்பிலும் நம்பிக்கை வாழ்விலும் வேரூன்றி வளர மறைமாவட்டத்தின் செயல்பாடுகளுடன் ஒத்துழைக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உளங்கனிந்த நன்றிகள். இறையாசீர் உங்கள் உள்ளங்களில் குடிகொள்வதாக!!!

இயக்குனர்

அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில்

## பொதுநிலையினர் பணிக்குழு அலுவலகம் திறப்பு



மறை மாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுவிற்கான அலுவலகம் கல்லுவிளையில் 16.09.2024 திங்கள் காலை 10 மணிக்கு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் அர்ச்சித்து தொடங்கி வைக்கப்பட்டது. இயக்குனர் அருட்தந்தை வினு D ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருள்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்களும் கலந்து கொண்டார். பொது நிலையினர் பணிக்குழு தலைவர் Adv. தனசிங் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

## SMYM மறைவட்ட மற்றும் 2024-2025க்கான நடுவண் தேர்தல்கள்:

SMYM தலைவர்களின் மறைவட்ட மற்றும் நடுவண் குழு தேர்தல்கள் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்றன. 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி ஆறுகாணியில் வைத்து ஆறுகாணி வட்டத் தேர்தலும், செப்டம்பர் 8 ஆம் தேதி மாறப்பாடியில் வைத்து களியல் மறைவட்ட தேர்தலும் நடைபெற்றது. நடுவண் குழு தேர்தல் 2024 செப்டம்பர் 22 ஆம் தேதி கல்லுவிளையில் நடைபெற்றது. ஏழு மறைவட்டங்களைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர். நடுவண் குழு பொறுப்பாளர்களாக பின்வரும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்:



மனோஜ் (முஞ்சிறை), துணைத் தலைவர்: அஞ்சனா எம்.எஸ் (வயலங்காரை), துணைத் தலைவர்: சுபிலா (பரைக்கோடு), செயலாளர்: ஜினோ (பிலங்காலை), இணைச் செயலர்: எபின் ஜோசப் (ஆறுகாணி), மற்றும் பொருளாளர்: ஸ்டெஃபின் ரெக்ஸ் (சூசைபுரம்). பின்னர் இயக்குநர் தந்தை அவர்கள் மெரின் சுஜித், அஜித், மேரி ஜென்சி. வி, அஸ்வின் சி. ஆர் மற்றும் விஜில் ஆகியவர்களை கவுன்சிலர்களாக நியமித்தார். மஞ்சாலுமூட்டைச் சேர்ந்த திரு. ஜினோ பொதுநிலையினர் உயிரூட்டுபவராக நியமிக்கப்பட்டார். தற்போது மறைமாவட்ட பொது உயிரூட்டுபவராகச் செயல்படும் அருட்சகோதரி எலைசா FCC அவர்கள் நடுவண் குழுவில் உள்ளார்.

இவண்,
அகில், செயலர்

# குழந்தை ஈசோ இயக்கம்

**என் நெஞ்சம் நிறைவும் அமைதியும் கொண்டுள்ளது. தாய்மடி தவழும் குழந்தையென என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாயுள்ளது** (திபா 131, 2).

அன்பார்ந்தவர்களே,



ஆகஸ்ட் மாதம் 29ஆம் தேதி புனித எவுப்பிராசியம்மாவின் திருநாள் கொண்டாடப்பட்டது. அதனை கருத்தில் கொண்டு செப்டம்பர் மாதம் குழந்தைகளுக்கு புனித எவுப்பிராசியம்மாவின் வாழ்க்கை வரலாற்றை குறித்து கற்று கொடுக்க பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் இம்மாத செயல்பாடாக புனித எவுப்பிராசியம்மாவின் குழுப்பாடல் கொடுக்கப்பட்டது. குழந்தை ஈசோ இயக்கத்தை சார்ந்த குழந்தைகள் அனைவரையும் ஒருங்கிணைத்து பாடல் பயிற்றுவித்து குழுப்பாடலை video எடுத்து அந்தந்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் இறையன்பிலும் நம்பிக்கை வாழ்விலும் வேரூன்றி வளர மறைமாவட்டத்தின் செயல்பாடுகளுடன் ஒத்துழைக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உளங்கனிந்த நன்றிகள். இறையாசீர் உங்கள் உள்ளங்களில் குடிகொள்வதாக!!!

இயக்குனர்

அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில்

## பொதுநிலையினர் பணிக்குழு அலுவலகம் திறப்பு

மறை மாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுவிற்கான அலுவலகம் கல்லுவிளையில் 16.09.2024 திங்கள் காலை 10 மணிக்கு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் அர்ச்சித்து தொடங்கி வைக்கப்பட்டது. இயக்குனர் அருட்தந்தை வினு D ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்களும் கலந்து கொண்டார். பொது நிலையினர் பணிக்குழு தலைவர் Adv. தனசிங் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## சுதந்திரதினம் 2024 ; மாறப்பாடி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கிழ் இயங்கும் சுய உதவி குழுக்களின் சார்பில் மாறப்பாடி மையத்தில் சுதந்திரதினம் 2024, ஆகஸ்ட் 16ஆம் தேதி கொண்டாடப்பட்டது. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் உதவி இயக்குநர் அருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல் மற்றும் அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் ஆகியோர் இணைந்து போட்டியை துவக்கி வைத்தனர். சுதந்திர தின பற்றை ஊக்குவிக்கும் நோக்குடன் குழு பாடல் மற்றும் தனிநபர் பேச்சுப் போட்டி நடைபெற்றது. நிகழ்வில் குழுப்பாடல் போட்டியில் அன்னை தெரசா குழு முதல் பரிசையும் செயின்ட் ஆன்றனி குழு இரண்டாம் பரிசையும் பெற்றனர். பேச்சுப்போட்டியில் திருமதி மெல்பா முதல் பரிசையும் திருமதி ஷீபா இரண்டாம் பரிசையும் பெற்றனர். இறுதியாக திருமதி சுனிதா அவர்கள் நன்றி கூறினார்கள்..

## புதிய பணியாளர்கள் அறிமுகப்படுத்தல் நிகழ்வு

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் புதிய பணியாளர்களை மையங்களில் அறிமுகப்படுத்தல் மற்றும் பணி ஓய்வு வாழ்த்து நிகழ்வு பல்வேறு மையங்களில் நடைபெற்றது. இந்த நிகழ்வு ஆகஸ்ட் 5 முதல் 21 தேதி வரை நடைபெற்றது. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்களும் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் உதவி இயக்குநர் அருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல் மற்றும் மைய பங்குதந்தையர்களும் கலந்து கொண்டனர்.

நிறுவனத்தின் இயக்குநர் தந்தை கலந்து கொண்டு பணி ஓய்வை குறித்தும் அவர்களின் சமூகப் பணி குறித்தும் வாழ்த்தி பேசினார்கள். தொடர்ந்து புதிய பணியாளர்களையும் அறிமுகப்படுத்தினார். உதவி இயக்குநர் தந்தை அவர்களும் பணி ஓய்வு பெறுவர்களை வாழ்த்தி பேசினார்கள். பணி ஓய்வு பெறும் பணியாளர்கள் பணி அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர்.

## மாணவர்களுக்கான திறன் வளர்த்தல் பயிற்சி

முக்கூட்டுக்கல் திருக்குடும்ப மேல்நிலைப் பள்ளியில் ஆகஸ்ட் மாதம் 19 மற்றும் 21ஆம் தேதிகளில் 6ம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சியானது பள்ளி நிர்வாகத்தால் ஏற்பாடு

செய்யப்பட்டு பள்ளி தாளாளர் அருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த பயிற்சியில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக CTWWC திட்டத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



இப்பயிற்சி போதை பழக்கம் மற்றும் தொலை தொடர்பு சாதனங்களுக்கு அடிமையாவதிலிருந்து மாணவர் மாணவிகளை மீட்டு கொண்டு வருவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில் நடைபெற்றது.

இரண்டு அமர்வுகளாக நடத்தப்பட்ட இப்பயிற்சியின் முதல் அமர்வில், அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்களால், போதைப்பழக்கத்தின் பல்வேறு வடிவங்கள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்த விளக்கங்களுடன் வகுப்பு நடத்தினார். குறிப்பாக, போதைப்பழக்கம் முக்கியமாக தொலைபேசி மற்றும் சமூக ஊடக பழக்கம் பற்றியும் விளக்கமாக எடுத்து கூறினார். மாணவர்களுக்கு விழிப்புணர்வு வகுப்பின் முக்கியத்துவம் புரிவதற்காக அவ்வப்போது அடிமைத்தனம் தொடர்பான கதைகளையும் நிகழ்வுகளையும் கூறி தெளிவாக புரிய வைத்தார். மேலும் கல்வியின் முக்கியத்துவத்தையும் கற்றலின் அவசியத்தையும் பல மேற்கோள்கள் காட்டி உற்சாகத்தோடு பயிற்சியை நடத்தினார். அவரது தெளிவான அணுகுமுறை, மாணவர்களுக்கு ஊடகம், போதைக்கு அடிமையாகும் அறிகுறிகள் மற்றும் அதை எதிர்கொள்ளும் வழிமுறைகளைப் புரிய உதவியது.

இதனைத் தொடர்ந்து, CTWWC திட்டப் பணியாளர்களால் முதல் அமர்வு குறித்த தெளிவான விளக்கம் சிறு சிறு செயல்பாடுகள் மூலம் தெளிவாக விளக்கப்பட்டது. இந்தப் பகுதியில் மாணவர்களுக்கு உற்சாகத்தை அழிப்பதற்காக சிறு சிறு பொழுதுபோக்கு செயல்பாடுகள் இடம்பெற்றன. ஒவ்வொரு செயல்பாடும், ஊடகத் தாக்கம் மற்றும் அதற்கான தடுப்பு பற்றிய முக்கிய அம்சங்களை

விளக்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. இந்த நிகழ்வு மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொள்வதற்கான ஆர்வத்தைத் தூண்டியது. மேலும் நிகழ்வின் நோக்கத்தை செயல்பாடுகள் மூலமாக தெளிவாக எடுத்துக்காட்டியது. இந்த இரண்டு நாள் பயிற்சி மாணவ மாணவிகளுக்கு அவர்களின் வாழ்க்கைக்கு தேவையான வழிகாட்டுதல் பயிற்சியாகவும் கல்வியின் முக்கியத்துவத்தையும் அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான வாழ்வியல் பாடங்களையும் கற்றுத் தந்த திறன் வளர்ப்பு பயிற்சியாகவும் அமைந்தது.

## கிராம சபாவில் பங்களிப்பு மற்றும் விழிப்புணர்வுப் பயிற்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி குளப்புறம் கிராமத்தில் உள்ள அண்ணிக்கரை பகுதியில் வைத்து கிராமசபை கூட்டமானது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு கிராமத் தலைவர்களால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது. இந்தக் கூட்டம் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் பொதுவான இடத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தின் முதல் பாகம் கிராமத்தில் உள்ளத் தலைவர்களால் ஓராண்டு கிராம செயல்பாடுகள் குறித்த நிகழ்வாக அமைந்து. பின்பு பணியாளர்கள் அவர்களின் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். இதன் படி திட்டம் குறித்தும், அதன் முக்கிய பணிகளை குறித்தும், செயல்படும் விதம் குறித்தும், திட்டப் பணியாளர்கள் சிறப்பாக விளக்கிக் கூறினர். குடும்பம் மற்றும் குடும்பத்தில் குழந்தைகளின் முக்கியத்துவம் குறித்தும் கூறினார். மேலும் அவர்கள் கிராமத்தில் உள்ள குழந்தைகள் காப்பகங்கள் செல்வதை தடுக்க கிராமத் தலைவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் குழந்தைகளை குறித்து அவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்றும் அனைவரிடம் வலியுறுத்தப்பட்டது. இத்திட்டம் பற்றியப் பகிர்வானது மக்கள் ஒரு சமூகமாக இணைந்து பணியாற்றுவதன் மதிப்பையும், குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவை மேம்படுத்துவதையும் எடுத்துக்காட்டும் விதமாக அமைந்தது.

## குடும்பத்தை வலுப்படுத்தும் விழிப்புணர்வு முகாம்

CTWWC திட்டத்தின் சார்பாக ஆகஸ்ட் மாதம் 9ம் தேதி குடும்பத்தை வலுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு வகுப்பு பளுகல் சுயஉதவிக்குழுக்களில் குடும்பத்தில் மதிப்புகள் மற்றும் குழந்தைகளின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மிகவும் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். இதில் குடும்பத்தின் அடிப்படை மதிப்புகள், குடும்ப அமைப்புகளின் சிறப்பம்சங்கள், குடும்பத்தில் பெற்றோரின் பங்கு ஆகிய கருத்துகள் சிறந்த எடுத்துகாட்டுகளுடன் திட்டப்பணியார்களால் விளக்கப்பட்டன மேலும் விழிப்புணர்வு வகுப்பு சிறப்பானதாக அமைந்திட

உணர்வூட்டும் கதைகள், அனுபவப்பகிர்வுகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

குடும்ப ஒற்றுமை, குழந்தைகளின் வளமான எதிர்காலம் ஆகியவற்றில் பெற்றோர் முக்கியமான பங்கு வகிக்கின்றனர் என்றும் அன்பு, மரியாதை, நேர்மை, பரிவு ஆகியவை குடும்பம் என்னும் ஆலயத்தில் ஒளிபரப்பும் விளக்காக இருக்க வேண்டும் என்றும் எடுத்துக்கூறினர். நிகழ்வின் முடிவில் பங்கேற்பாளர்கள் அவர்களின் குடும்ப அனுபவங்களையும் நிகழ்வு குறித்த கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். மேலும், CTWWC திட்டம் குறித்தும் அதன் பணிகள் குறித்தும் காப்பகங்கள் குறித்தும் கருத்துகளை திட்டக்குழுவினர் எடுத்துக்கூறினர். இந்த விழிப்புணர்வு வகுப்பானது மக்களிடையே குடும்பத்தை வலுபடுத்துவதற்கான விழிப்புணர்வை உறுதிபடுத்தும் சிறந்த நிகழ்வாக அமைந்தது.

## C.L.F கூட்டம்

காரோடு மையத்தின் சுயஉதவிக்குழுக்களின் C.L.F கூட்டமானது 12-08-2024 அன்று புனித ஜோசப் அரங்கத்தில் வைத்து களப்பணியாளர் திருமதி சரண்யா தலைமையில் நடைபெற்றது. இதில் புதிய C.L.F பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஒரு வருட குழுக்களின் செயல்பாடுகள் குறித்து விவாதித்தனர். அதில் ஒரு பகுதியாக செப்டம்பர் மாதம் அத்தப்பூ போட்டி மற்றும் போதை விழிப்புணர்வு நிகழ்சி நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இதில் 12 குழுக்களை சார்ந்த 32 பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## வரவேற்பு - உயர் பேராயர் மார் ரபேல் தட்டில்

சீரோ மலபார் திருச்சபையின் தலைவரும், கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் காப்பு தந்தையுமான உயர் பேராயர் மார் ரபேல் தட்டில் அவர்கள் இரண்டு நாட்கள் தக்கலை மறைமாவட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டார். அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி சமூக சேவை சங்க அலுவலகத்திற்கு ஆகஸ்ட் 10ஆம் தேதி வருகை புரிந்தார். KKSSS இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் சால்வை அணிவத்து பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அப்போது உயர் பேராயர் அவர்கள் நிறுவனத்தின் செயல்பாடுகளை கேட்டு அறிந்தார். உடன் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் உடன் இருந்தார். இந்த நிகழ்வில் KKSSS பணியாளர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

## M.S.W மாணவர்கள் வருகை

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணிகளை பற்றித் தெரிந்துகொள்வதற்காக ஆகஸ்ட் 14ஆம் தேதி மரியகிரி மலங்கரை கல்லூரி, ஆகஸ்ட் 21 தேதி நாஞ்சில் கத்தோலிக்க கல்லூரி, 27ஆம் தேதி நாகர்கோவில் ஹோலி கிராஸ் கல்லூரி ஆகியவற்றில் M.S.W பயிலும் மாணவர்கள் வருகை புரிந்தனர். கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் செயல்பாடுகளை இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் மாணவர்களுக்கு விளக்கிக் கூறினார்.



## ஓண கொண்டாட்டம்

கன்னியா குமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கும் சுயஉதவி குழுக்களின் சார்பில் ஓணப்பண்டிகை கொண்டாடப்பட்டது. இதில் 4ஆம் தேதி வயலங்கரை 6ஆம் தேதி மாறப்பாடி, 11ஆம் தேதி தெற்றிவிளை, 12ஆம் தேதி கரோடு மற்றும் 14 தேதி வாறுதட்டு மையங்களில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்சிகள் இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் வழிகாட்டுதலில் மைய இயக்குநர் தந்தையர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் அத்தப்பூ, ஓணப்பாட்டு மற்றும் மாவேலி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.

## பகிர்வு- ஓணப்பண்டிகை

தெற்றியோடு, சுய உதவிக்குழு சார்பில் ஓணப்பண்டிகை செப்டம்பர் 11ஆம் தேதி

தெற்றியோடு, ஆசீர் வித்தியாலா சிறப்பு பள்ளி மாணவர்களோடு இணைந்து கொண்டாடினார்கள். காலை 09.00 மணியளவில் தெற்றியோடு சுய உதவிக்குழு சார்பில் குழு ஓண கோலப்போட்டி நடைப்பெற்றது. இதில் 4 குழுக்கள் பங்கு பெற்றனர். தொடர்ந்து சிறப்பு பள்ளி மாணவர்களோடு இணைந்து கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக அருட்தந்தை. அஜிஷ் அட்டியில் மற்றும் அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்களும் கலந்து கொண்டு ஓணப்பண்டிகை வாழ்த்து செய்தியை சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கினார்கள்.

KKSSS இயக்குநர் அருட்தந்தை.தோமஸ் பூவத்துமூட்டியில் அவர்கள் KKSSS-ன் ஆட்டுக்கு குட்டி என்ற திட்டத்தின் வழியாக ஒரு பயனாளிக்கு ஆட்டுக்குட்டி வழங்கப்பட்டது. ஆசீர் வித்யாலாயா தலைமை ஆசிரியை அருட்சகோதரி.ரீமா ஓண வாழ்த்துரை வழங்கினார்கள். மாணவர்கள் மற்றும் குழு உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து சுய உதவி குழு உறுப்பினர்கள் சிறப்பு பள்ளி மாணவர்களோடு இணைந்து ஓண விருந்து நிகழ்வில் பங்கேற்றனர்.

**மாவட்ட அளவிலான ஓணப் போட்டி**

கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலாத் துறை மற்றும் பிறின்ஸ் கல்வி நிலையம் இணைந்து மாவட்ட அளவிலான ஓணப் போட்டி களியக்காவிளை பிறின்ஸ்



கல்வி வளாகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்டதின் பல்வேறு இடங்களை சார்ந்த 20 சுய உதவிக்குழுவும் 180 பெண்களும் பங்கேற்றனர். கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் இரண்டு சுயஉதவி குழுக்கள் பங்கேற்றனர். பிலோமினாள் சுயஉதவி குழு முதல் பரிசுக்கான கோப்பையும் ரூபாய் 5000 பரிசுத் தொகையையும். மதர் தெரசா சுயஉதவி குழு மூன்றாம் பரிசையும் ரூபாய் 3000 பரிசுத் தொகையையும் பெற்றனர்.

## புற்று நோய் மற்றும் சித்த மருத்துவம்

KKSSS-ன் அண்ணிக்கரை, சுய உதவி குழுக்களின் சார்பில் புற்று நோய் மற்றும் சித்த மருத்துவம் பற்றிய கருத்தரங்கு செப்டம்பர் 21 தேதி மாத்யு அரங்கத்தில் நடைபெற்றது. இதில் அருட்தந்தை சுமேஷ் வள்ளியாம்தடத்தில் பங்குதந்தை, புனித மாத்தேயு ஆலயம் அண்ணிக்கரை அவர்கள் தலைமையுரையாற்றி தொடங்கி வைத்தார். கருத்தரங்கை மருத்துவர் நரேன் அவர்கள் புற்று நோய் ஒழிப்பு மற்றும் சித்த மருந்து பற்றி கருத்துரை வழங்கினார்கள். அப்போது சித்த மருத்துவத்தை பயன்படுத்தி புற்றுநோய் ஒழிப்பு பற்றி விளக்கி கூறினார். தொடர்ந்து சித்த மருத்துவத்தின் பயன், வாழ்க்கை முறை மாற்றம், ஆரோக்கியமான உணவு முறைகள், எண்ணெய் குளியலின் பயன்கள், வளரிளம் பெண்களுக்கான உணவுமுறை, ரத்த சோகை குறித்து பேசினார். அண்ணிக்கரை சுய உதவி குழு உறுப்பினர்கள் சுமார் 20 பெண்கள் கலந்து கொண்டனர்.

## KKSSS-ன் ஓணம் விழா

ஓணம் பண்டிகை சிங்கம் மாசம் என்று அழைக்ககூடிய, ஆவணி மாதத்தின் அத்தம் நட்சத்திரம் தொடங்கி திருவோணம் நட்சத்திரம் வரையிலான பத்து நாட்கள் கொண்டாடப்படக்கூடிய மிக சிறப்பான பண்டிகை கேரளம் மற்றும் கேரளாவை எல்லலைகளாக கொண்ட குமரி மாவட்டத்தில் இந்த பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், சார்பில் பணியாளர்கள் இணைந்து பல வண்ண மலர்களால் அத்தப்பூ கோலமிட்டு, பல கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டன. ஒணப்பண்டிகையை சிறப்பாக இயக்குநர் தந்தை தலைமையில் பணியாளர்கள் ஒன்றிணைந்து செப்டம்பர் 13 தேதி கொண்டாடப்பட்டது.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

நலவாழ்வு இயக்கத்தின் சார்பில் மருத்துவ மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்: செப்டம்பர் 29, 2024 அன்று முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலய வளாகத்தில் மேல்புறம் ஹெல்சன் ஹெல்த்கேர் நிறுவனத்துடன் இணைந்து சுகாதார ஆணையத்தால் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. முகாமில் 75 பேர் பயனடைந்தனர். செப்டம்பர் 29, 2024 அன்று, வயலங்கரையில் போதைப் பழக்கம் மற்றும் முதிர் வயது பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோரை கவனம் செலுத்தும் விழிப்புணர்வு முகாமை நலவாழ்வு இயக்கம் ஏற்பாடு செய்தது. நலவாழ்வு இயக்க இயக்குநர் அருட்தந்தை சுபின் தலைமை வகித்தார்.

# சங்ஙனாச்சேரியில் ASMI சபையின் பொன்விழா

சங்ஙனாச்சேரியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மேரி இம்மாகுலேட்டின் அப்போஸ்தலிக்க சகோதரிகள் (ASMI) அவர்களின் சபையின் பொன்விழாவை 21 செப்டம்பர் 2024 அன்று சங்ஙனாச்சேரியில் உள்ள சீரஞ்சிறையில் உள்ள ஜெனரலேட் இல்லத்தில் கொண்டாடினர். 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதி கர்தினால் மார் ஆண்டனி படியறா அவர்களால் தொடங்கப்பட்ட இந்த சபையில் தற்போது 100 சகோதரிகள் பல்வேறு இடங்களில் பணியாற்றி வருகின்றனர். ASMI சகோதரிகள் கன்னியாகுமரி மண்டலத்தில் 26 ஜனவரி 1978 இல் தங்கள் பணியைத் தொடங்கினார்கள். அவர்கள் நித்திரவிளை, அண்ணிக்கரை வயலங்கரை மற்றும் சீனிவிளை ஆகிய பங்குகளில் சேவை ஆற்றி வருகின்றனர். குறிப்பாக நித்திரவிளை கருணையில்லத்தில் அவர்களின் தன்னலமற்ற சேவை பாராட்டுக்குரியது. மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்வதில், நோய்த்தடுப்பு சிகிச்சை, சமூக சேவைகள், வீடுகளுக்குச் சென்று ஆலோசனை வழங்குதல் போன்றவற்றில் சகோதரிகள் கவனம் செலுத்துகின்றனர். பொன்விழா கொண்டாட்ட நாளில் மாலை 3.30 மணிக்கு மார் ஜோசப் பெருந்தோட்டம் தலைமை தாங்கி நன்றி திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் ஜூபிலி பொதுக்கூட்டம் நடந்தது.




# குடும்ப நல்வாழ்வு

### மது அடிமைகள் மறு வாழ்வு மையம்

மது அடிமைகள் மறு வாழ்வு மையத்தில் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுபடுத்துதலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் மது மற்றும் மன நோயாளிகளுக்கான சிகிட்ச்சை நடைபெற்று வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கள் கிழமைகளில் மதியம் 12 மணியளவில் மன நல மருத்துவர் வருகை புரிவார். இம்மையத்திலிருந்து சிகிட்ச்சை பெற்றவர்கள் நலமடைந்துள்ளனர். இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமையில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன .

### திருமண பயிற்சி வகுப்பு

திருமண பயிற்சி வகுப்பு மாதந்தோறும் இரண்டாவது வாரம் வெள்ளி,சனி ஆகிய நாட்களில் கல்லுவிளையில் வைத்து காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. அதில் மொத்தம் 14 பேர் கலந்து கொண்டனர்.



## நிகழ்வுகள்

- தேவமாதாவின் பிறந்தநாளை முன்னிட்டு ஒன்றாம் தேதி முதல் எட்டாம் தேதி வரை மாதர் ஜோதிஸ் சார்பாக எட்டு நோன்பு அனுசரிக்கப்பட்டது.
- செப்டம்பர் மூன்றாம் தேதி தேவமாதாவின் பிறந்தநாளை முன்னிட்டு இல்வாழ்வு இயக்கத்தில் பணிபுரியும் உறுப்பினர்கள் சேர்ந்து ஜெபமாலை பவனி நடத்தினார்கள்.
- செப்டம்பர் 17ஆம் தேதி அன்று நமது இல்வாழ்வு இயக்க செயல்பாடுகள் குறித்து மதிப்பீடுகள் செய்யப்பட்டது.



- அனைத்து பக்த இயக்கங்களின் கூடுகையானது செப்டம்பர் 26ஆம் நாள் தக்கலை ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. கூடுகையில் மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக இயக்குனர் அருட்தந்தை ஜிம்மி மற்றும் துணை இயக்குனர் அருட்சகோதரி றோஸ் அவர்களும் கலந்து கொண்டனர்.
- செப்டம்பர் 28ஆம் தேதி கல்லுவிளை இல்வாழ்வு மையத்தில் வைத்து அனிமேட்டர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

**பார்வையிடல் :**

அனைத்து புதன்கிழமைகளிலும் இல்வாழ்வு இயக்க தலைவர் அருட்சகோதரி றோஸ் அவர்களும் உறுப்பினர்களும் சேர்ந்து கார்ரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தை பார்வையிட சென்றனர்.

**மாதாந்திரச் செயல்:**

ஏழைகளுக்கு கொடுப்பதற்கு அனைத்து பங்குகளில் இருந்தும் மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் பயன்படுத்தாமல் வைத்திருக்கும் ஆடைகளை சேகரித்து இல்வாழ்வு இயக்கம் அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்

**இயக்குநர்**




# வின்சென்ட்-தே-பவுல் சபை

## திட்டம் வழங்கும் விழா - பாலப்பள்ளம்

செப்டம்பர் 8, 2024 இல் பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் செயல்படும் புனித வின்சென்ட் தே பவுல் கிளைச் சபைகள் சார்பில் திட்டம் வழங்கப்பட்டது. கிளை சபையின் ஆன்மீக ஆலோசகர் அருள்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் திட்டத்தை உரையாற்றி தொடங்கி வைத்தார்கள். மத்திய சபையின் இணைத்திட்ட அலுவலர் சகோ. கிறிஸ்துதாஸ் அவர்கள் திட்டம் குறித்து விளக்கவுரை நிகழ்த்தினார். சூசைபுரம் வட்டார சபை தலைவர் சகோ. ஜாண் மற்றும் வட்டார திட்ட அலுவலர் சகோ. ஐவன்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிறிஸ்துராஜா கிளைச் சபை சார்பில் 13 நபர்களுக்கு தலா ரூபாய் 4000 வீதம் 52000மும் புனித ரீத்தா கிளைச் சபை சார்பில் 19 நபர்களுக்கு 76000 ரூபாயும் புனித இக்னேசியஸ் லயோலா கிளைச் சபை சார்பில் 4 நபர்களுக்கு ரூபாய் 16000 மும் வழங்கப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் கிளை சபையினர் சிறப்பாக செய்திருந்தனர்.

செப்டம்பர் 29,2024 ஞாயிறு அன்று சபை நிறுவனர்கள் விழா பாலப்பள்ளத்தில் சிறப்பாக கொண்டாடினார்கள். அன்றைய தின சிறப்பு நிகழ்வாக வின்சென்டியர்கள் காணிக்கைப் பவனியில் கலந்து கொண்டனர். சிறப்பு மன்றாட்டுகள் மற்றும் அன்றைய திருவிவிலிய வாசகங்கள் உறுப்பினர்களால் வாசிக்கப்பட்டது. திருப்பலிக்கு இடையில் உறுப்பினர்கள் உறுதிமொழி புதுப்பித்துக் கொண்டனர். திருப்பலி முடிந்தவுடன் பங்கு மக்கள் அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. நிகழ்வுகளை தொடர்ந்து சகாய மாதா உறவியத்தைச் சார்ந்த நோயாளி ஒருவருக்கு ரூபாய் 10000 ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நோயாளியின் வீட்டில் சென்று கொடுக்கப்பட்டது.

## ஆறுகாணி வட்டார சபையின் 26ஆவது ஆண்டு விழா மற்றும் பொறுப்பாளர்கள் பணியேற்பு

ஆறுகாணி வட்டார சபையின் 26ஆவது ஆண்டு விழா மற்றும் பொறுப்பாளர்கள் பணியேற்பு விழாவானது செப்டம்பர் 8, 2024 அன்று காலை 9.30 மணிக்கு பேரருட்தந்தை டோஜி பறம்பில்பறம்பில் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் தொடங்கி நடைபெற்றது. தொடர்ந்து பத்துகாணி தோமையார் கிளை சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை தோமஸ் சவுரியாங்குழியில் அவர்கள்

ஆன்மீக உரை நிகழ்த்தினார். தக்கலை மத்திய பேரவையின் தலைமை பணியாளர் சகோ. றாபி அவர்கள் புதிய பொறுப்பாளர்களை வாழ்த்தி பேசினார். மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்சென்ட் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் வட்டார சபையின் தலைவராக தேர்வு செய்யப்பட்ட சகோ. T. M சேவியர் அவர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் பணியேற்பு நடைபெற்றது. முன்னாள் வட்டார சபை தலைவர் சகோ. எபி அவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து முன் நின்று வழிநடத்தினார்கள். பின்னர் இறுதி செபத்துடன் விழா இனிதே முடிவடைந்தது.



## மஞ்சாலுமூடு வட்டார சபையின் 26ஆவது ஆண்டு விழா மற்றும் பொறுப்பாளர்கள் பணியேற்பு

மஞ்சாலுமூடு வட்டார சபையின் 26ஆவது ஆண்டு விழா மற்றும் பொறுப்பாளர்கள் பணியேற்பு விழாவானது செப்டம்பர் 8, 2024 மதியம் 2 மணியளவில் மஞ்சாலுமூடு சிறுமலர் ஆலயத்தில் வைத்து பேரருட்தந்தை மார்டின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து மத்திய சபை தலைவர் சகோ. றாபி புதிய பொறுப்பாளர்களை வாழ்த்திப் பேசினார். புனித தோமையர் கிளை சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சந்தோஷ் கையாலப்பறம்பில் CMI அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் வட்டார சபையின் தலைவராக தேர்வுச் செய்யப்பட்ட சகோ. ஜோஸ் அவர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் பணியேற்பு நிகழ்வு நடைபெற்றது. முன்னாள் வட்டார சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்சென்ட் அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள். இடையிடையே இளம் வின்சென்டியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர் இறுதி செபத்துடன் விழா இனிதே முடிவடைந்தது.

## VAAN

தக்கலை மத்திய பேரவையின் சார்பில் கட்டப்பட்டிருக்கும் ஆசாரிப்பள்ளம் VAAN (விடியல் அருள் அவை நடுவம்) செப்டம்பர் 29 ,2024 அன்று எளிய முறையில் செயல்பாட்டு வடிவம் பெற்றது. புனித அல்போன்சா திருத்தல ஆலயத்தின் ஆன்மீக ஆலோசகர் பேரருள்தந்தை சனல் அடிகளார் தலைமையில் இறைவேண்டலுடன் நிகழ்வு துவங்கியது. தொடர்ந்து மத்திய சபை கூடுகையும், பொறுப்பு ஒப்படைத்தலும் (திறவுகோல் வழங்குதல்) நடைபெற்றது. இந்நிகழ்வில் மத்திய சபை உறுப்பினர்கள் மற்றும் நாகர்கோவில் அல்போன்சா கிளைச் சபையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



## களியில் புனித மரியன்னை கிளைச் சபை

களியில் புனித மரியன்னை கிளை சபை சார்பாக புனித வின்செண்ட் தே பவுல் திருவிழா செப்டம்பர் 27இல் திருப்பலியுடன் கொண்டாடபட்டது.

## தக்காளிவிளை கிளைச்சபை

புனித வின்செண்ட் தே பவுல் திருநாள் கொண்டாட்டம் தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தில் செயல்படும் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர் கிளைச்சபைகள் இணைந்து செப்டம்பர் 29,2024 அன்று சபையின் நிறுவனர் அருளாளர் பிரடரிக் ஓசானாம் மற்றும் பாதுகாவலர் புனித வின்செண்ட் தே பவுல் ஆகியோரின் திருநாள் பாசமிகு பங்கு தந்தை அருட்தந்தை ஷிஜோ அவர்களின் தலைமையில் சிறப்பு திருப்பலியுன் கொண்டாடப்பட்டது. உறுப்பினர்கள் அனைவரும் திருப்பலியில் கலந்து கொண்டதோடு, காணிக்கைப் பவனி, மன்றாட்டு, உறுதிமொழி புதுப்பிப்பு ஆகியவற்றில் சிறப்பாக கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் பங்கு மக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

தகவல் சேகரிப்பு
திரு ஷாஜி D P

# மரியாயின் சேனை
# தக்கலை கொமித்சியம்

## மரியே வாழ்க !

தக்கலை கொமித்சியத்தின் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சகோ. செலின் மேரி அவர்களுக்கு, கொமித்சிய ஆன்ம இயக்குனர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் பொறுப்பு வழங்கினார்கள்.

செப்டம்பர் 15, 2024 அன்று குலசேகரம் இரண்டாம் ஜாண்பால் ஆலயத்தில் நடைபெறும் பனிமாதா பிரசீடியத்தில் கொமித்சியத் தலைவர் சகோ. பன்னீர்செல்வம் அவர்களால் கூட்டம் நடத்தும் முறை பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் அருட்சகோதரி ஜெயின் மேரி SABS அவர்களும் பிரசீடிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

செப்டம்பர் 21, 2024 அன்று களியல் புனித மரியன்னை ஆலயத்தில் செயல்படும் புனித மரியன்னை பிரசீடியத்தில், கொமித்சியத் தலைவர் அவர்களால் பிரசீடியா கூட்டம் நடத்தும் முறை பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. இப் பயிற்சியில் பங்குத்தந்தை மற்றும் அருட்சகோதரி அவர்களும் கலந்து கொண்டு ஆசீர் வழங்கினர்.

செப்டம்பர் 29, 2024 அன்று பத்துகாணி புனித தோமையார் ஆலயத்தில் அமலோற்பவ மாதா என்ற புதிய பிரசீடியம் நமது ஆயரின் அனுமதியுடன் 12 உறுப்பினர்களைக் கொண்டு துவங்கப்பட்டது. பிரசீடிய பொறுப்பாளர்களாக தலைவர் சகோ. நிதிஷா, துணைத் தலைவர். சகோ வசந்தகுமாரி, செயலர்



சகோ. சாந்தி, பொருளர் சகோ. ஷைலா ஆகியவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இக்கூட்டத்தில் பங்கு தந்தை தோமஸ் சவுரியான்குழி மற்றும் அருட்சகோதரி எல்சீனா SH ஆகியவர்கள் கலந்து கொண்டு உறுப்பினர்களை வாழ்த்தினர். இக்கூட்டத்தை ஒருங்கிணைத்து வழி நடத்தியவர்கள் கொமித்சியத் தலைவர் மற்றும் கொமித்சியத் துணை தலைவர் சகோ. பெஞ்சமின் போஸ் ஆகியோர் ஆவர்.

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் 11.08.2024 ஞாயிறு அங்கு செயல்படும் கார்மல் மாதா பிரசிடியத்திற்கு பிரசிடியம் நடத்தும் முறை மற்றும் மரியாயின் சேனை பற்றி பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை கொமித்சியத் தலைவர் வழிநடத்தினார்கள்.

செப்டம்பர் 22,2024 அன்று பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயத்தில் செயல்பட்டு வரும் வேளாங்கன்னி பிரசீடியதில் புதிய பொறுப்பாளர்களை நியமித்து கொமீசிய தலைவர் அவர்களால் பிரசீடியம் நடத்தும் முறை பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. புதுபொறுப்பாளர்கள். தலைவர். சகோ. பிளாரி அமலா, துணைத் தலைவர். சகோ. ஷாலினி, செயலர். சகோ. லிற்றில் பிளவர், துணைச் செயலர். சகோ. சிம்லா, பொருளர். சகோ. ராஜேஸ்வரி ஆகியவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர். புதிய பொறுப்பாளர்களை பங்குத்தந்தை லூக்கா கொல்லம்பரம்பில் CMI அவர்கள் வாழ்த்தி ஆசீர் வழங்கினார்.



**அன்னையின் பணியில்**
**சகோ.R. தோமஸ் பன்னீர்செல்வம்**

# மறைமாவட்டச் செய்திகள்

### கம்பத்தில் சமூக உணர்திறன் திட்டம்

குட்டிக்கானம் மரியன்னை கல்லூரியின் தலைமையில், 10 எம்பிஏ மாணவர்கள் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிக்காக கம்பம் மிஷனுக்கு 8 செப்டம்பர் 2024 அன்று வருகை தந்தனர். சந்திப்பின் போது, கம்பம் மிஷனின் செயல்பாடுகளை அருட்தந்தை தாமஸ் கஞ்சிரக்காட்டு மற்றும் அருட்சகோதரி எல்சி SH ஆகியோர் ஹேர்பேண்ட் தயாரித்தல் மற்றும் பாவாடை தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் செயல்விளக்கத்தை வழங்கினார். பிற்பகலில், மாணவர்கள் கம்பம் பகுதியில் நிலவும் பல்வேறு பிரச்சனைகள் மற்றும் சவால்கள் குறித்து ஆய்வில் ஈடுபட்டனர். திருத்தொண்டர் அமன்டோ அவர்கள் மாணவர்களுக்கு உதவினார்.

## தென்காசி மறைத்தளம்

### அருட்பணியாளர்கள் மற்றும் அருட் கன்னியர்களின் கூட்டம்

செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதி மேக்கரை கோலிக்றோஸ் கன்னியர் இல்லத்தில் வைத்து மாலை 4 மணி ஆராதனையுடன் கூட்டமானது ஆரம்பமானது. தக்கலை மறை மாவட்டத்தின் ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் வருகை தந்தார். மலங்கரை சபையை சார்ந்த அருட்தந்தை அல்போன்ஸ் அவர்கள் தியான உரை வழங்கினார். ஆராதனை தொடர்ந்து கூட்டமானது நடைபெற்றது. மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து மறைத்தள பணிகளைப் பற்றியப் பகிர்வு நடைபெற்றது. இறுதியில் அன்பு விருந்துடன் கூடுகையானது நிறைவுற்றது.

### ஜெப கூட்டம் – லாலாகுடியிருப்பு

செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி லாலாகுடியிருப்பு பகுதியில் உள்ள மருத்துவ சேவை மையத்தில் வைத்து மாலை 4 மணியளவில் ஜெப கூட்டமானது தொடங்கப்பட்டது. அருட்தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் செபத்தை துவங்கி வைத்து நற்செய்தி உரை வழங்கினார். சுமார் 15 பேர் இதில் பங்கேற்றனர்.

# அருட்சகோதரர்களிடமிருந்து

ஈசோ மெசியாவுக்கு புகழ்!

இறைவனின் அருளால் அருட்சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். ரூகாலயா உயர் குருமடத்தில் 2024 செப்டம்பர் 5 அன்று சமூக தினம் (Community day) கொண்டாடப்பட்டது. செப்டம்பர் 12 இல் ஓணம் விழாவும் கொண்டாடப்பட்டது. அன்று காலை, தலச்சேரி உயர் மறைமாவட்ட பேராயர் மார் ஜோசப் பாம்பிளானி அவர்கள் தலைமையில் மலையாள மொழியில் திருப்பலி நடைபெற்றது. செப்டம்பர் 22இல் மிஷன் மேளா நடைபெற்றது. 26 செப்டம்பர் அன்று அரை நாள் ஆராதனை நடைபெற்றது.

திருச்சூர், மேரி மாதா உயர் குருமடத்தில் செப்டம்பர் 21 ஆம் தேதி முதல் விடுமுறை தொடங்கியது. அதற்கு முன், கூத்தங்குளம், செயின்ட் ஜான்



தி இவாஞ்சலிஸ்ட் தேவாலயத்தில் ஒரு அனுபவப் பயிற்சிக்கு (Exposure programme) அருட்சகோதரர்கள் சென்றிருந்தனர். இது செப்டம்பர் 15 முதல் 21 வரை நடைபெற்றது. உரோமில் பயின்று வரும் அனைத்து சகோதரர்களும் விடுமுறை முடித்து செப்டம்பர் 7 ஆம் தேதி மீண்டும் குருமடத்திற்கு வந்தனர். அதன் பிறகு ஒரு வாரம் தியானம் நடைபெற்றது. ஓணம் பண்டிகையை கொண்டாட அங்கு பயிலும் இந்தியாவைச் சார்ந்த அருள் சகோதரர்கள் அனைவரும் ஒன்று கூடினர். சிறப்பு உணவு மற்றும் விளையாட்டுகள் நடைபெற்றன.

*சகோ பிபின் & வின்சிலின்*

# மறைவட்டச் செய்திகள்

## மஞ்சாலுமூடு

### புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு

புனித தோமையார் ஆலயம் முழுக்கோட்டில் புனித மத்தேயுவின் பெயர் கொண்ட பங்கு தந்தையர்களின் திருவிழா செப்டம்பர் 22, 2024 அன்று பங்கு மக்களால் கொண்டாடப்பட்டது.



### திருச்சிலுவை ஆலயம் – மாலைக்கோடு

மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் செப்டம்பர் 13, 2024 முதல் செப்டம்பர் 23 வரை பத்து தினங்கள் திருவிழா நடைபெற்றது. இவ்விழாவினை பங்கு



தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் கொடி ஏற்றி தொடங்கி வைத்தார்கள். விழாவின் ஒவ்வொரு நாளும் ஜெபமாலை, லதீஞ்ச், மற்றும் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. விழாவின் மூன்றாவது நாளாகிய ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி அளவில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் sdb அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு உறவியம் மற்றும் பக்த இயக்கம் திருப்பலி சிறப்பித்தார்கள்.

### புனித மிக்கேல் ஆலயம் – தெற்றிவிளை







தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம் தெற்றிவிளையில் செப்டம்பர் 28, 29 2024 தேதிகளில் திருவிழா கொண்டாடப்பட்டது. முதல் நாள் திருப்பலி பங்குத்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் நிறைவேற்றினார்கள். தொடர்ந்து நற்கருணை ஆராதனை நடைபெற்றது. இரண்டாவது நாள் ஞாயிற்றுக்கிழமை புனித மரியன்னை இளங்குருமடம் முக்கூட்டுக்கல்லில் உள்ள அருள் தந்தையர்கள் அருள் சகோதரர்கள் இணைந்து இராசை திருப்பலி நிறைவேற்றினர். தொடர்ந்து அன்பின் விருந்துடன் திருவிழா இனிதே நிறைவு பெற்றது

## களியல்

### புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

செப்டம்பர் மாதம் களியல் மரியன்னை ஆலயத்தில் 10 நாள் திருவிழா நடைபெற்றது. செப்டம்பர் 1, 2024 அன்று ஆயர் அவர்கள் வருகை புரிந்து, முதல் திருவிருந்தும் உறுதிப்பூசுதலும் வழங்கப்பட்டது. செப்டம்பர் 8 2024

ஞாயிற்றுக்கிழமை பத்தாம் திருவிழா அன்று மரியன்னையின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டு கொடி இறக்குதலுடன் திருவிழா நிறைவு பெற்றது.



செப்டம்பர் 15 2024 அன்று ஞாயிற்றுக்கிழமை ஓணம் பண்டிகையை ஒட்டி மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் அனைவரும் இணைந்து அத்த பூக்கள் போட்டார்கள்.

செப்டம்பர் 17 செவ்வாய்க்கிழமை அன்று ஆதரவற்ற ஏழை மக்களை சந்தித்து இளைஞர் இயக்கத்தினர் உணவு வழங்கினர்.

செப்டம்பர் 29 அன்று வின்சென்ட்-தே-பவுல் சபையின் பாதுகாவலர் தினம் பங்கில் கொண்டாடப்பட்டது.

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

அன்னை மரியாவின் பிறப்பு திருவிழாவை முன்னிட்டு செப்டம்பர் 1 முதல் 7 வரையுள்ள நாட்களில் மாலை 5.30 மணியளிவில் செபமாலை மற்றும் திருப்பலியும் நடைபெற்றது. 2024 செப்டம்பர் 15 ஞாயிற்றுக்கிழமை அன்று திரு. எட்வின்சன் அவர்களால் மறைகல்வி நிலையம் பார்வையிடப்பட்டது. 2024 செப்டம்பர் 22 ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கோணம் பங்கிலிருந்து சிறுமலர் மிஷன் லீக் பொறுப்பாளர் அவர்களால், மிஷன் லீக் இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் ஆவணங்கள் பார்வையிடப்பட்டது.

# சூசைபுரம்

## ▶ புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்

செப்டம்பர் 01,2024 - தூய அன்னையின் பிறந்தநாள் முன் தயாரிப்பாக திருப்பலி முடிந்தவுடன் அன்னையின் திருச்சொரூபமானது பவனியாக அனைத்து உறவினங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு ஜெபிக்கப்பட்டு மாலை 6 மணிக்கு ஆலயம் வந்தடைந்தது. தூய அன்னையின் பிறந்தநாள் முன் தயாரிப்பாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கருத்துக்காக ஜெபிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு நாளும் அனைவரும் செய்யத் தக்க ஒரு குறிப்பிட்ட செயல் திட்டம் கொடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.



செப்டம்பர் 07,2024- அன்று நினிவே நோன்பை நினைவுபடுத்தும் வண்ணம் எல்லா மக்களும் தங்களுக்கு வரவிருக்கும் தீமைகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் விதமாக நோன்பிருந்து ஜெபிப்பதற்காக காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அன்றைய தினம் ஒதுக்கப்பட்டது. தூத்துக்குடி இறையிரக்க கத்தோலிக்க ஊழியங்களின் 'இயேசுவின் ஜேம்ஸ்' அவர்கள் ஜெபத்தில் அனைவரையும் வழிநடத்தினார்கள்.

செப்டம்பர் 08,2024 - காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை தொடர் ஜெபமாலை நடத்தப்பட்டது. இதில் ஒவ்வொரு உறவிய மக்களும் பக்த இயக்கத்தினரும் தங்களுக்கு குறிப்பிடப்பட்ட நேரத்தில் ஆலயத்தில் வந்து ஜெபமாலை சொல்லி ஜெபித்தார்கள். மாலை 4 மணிக்கு ஆடம்பர

திருப்பலியும் அன்னையின் பிறந்தநாள் கொண்டாட்டமும் நடைபெற்றன. ஆலயத்தைச் சுற்றிலும் ஜெபமாலை பவனி நடத்தப்பட்டது. குழந்தைகள் மாதாவை போல் வேடமணிந்து இதில் கலந்து கொண்டனர். இறுதியாக அனைவருக்கும் நேர்ச்சை அப்பம் வழங்கப்பட்டது.

செப்டம்பர் 08, 2024 - மறைக்கல்வி மாணவர்களுக்கான எழுத்துப் போட்டியானது பங்களவில் நடத்தப்பட்டது.

செப்டம்பர் 14, 2024 - சிலுவை புகழ்ச்சித் திருநாள் ஆடம்பர திருப்பலியானது காலை 6:15 மணிக்கு பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

செப்டம்பர் 15, 2024 - அன்று அருட்தந்தை மேத்யூ தெக்கேகுற்று அவர்களின் பெயர் கொண்ட திருநாள் கொண்டாட்டமானது திருப்பலிக்குப் பின்னர் நடத்தப்பட்டது. பங்குத் தந்தையின் வழிகாட்டலில் வாழ்த்துரை வழங்கியும் கேக் வெட்டியும் வாழ்த்து பாடல் பாடியும் பரிசுகள் வழங்கியும் மக்கள் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

செப்டம்பர் 22,2024 - அன்று மறைக்கல்வி நிலையமானது ஆசிரியர் விஜயகுமார் அவர்களால் பார்வையிடப்பட்டது.

செப்டம்பர் 29,2024 - அன்று அதிதூதர்களான புனிதமிக்கேல், புனித கபிரியேல், புனித ரஃபேல் ஆகியோரின் திருவிழா திருப்பலியானது அருட்தந்தை மைக்கிள் ஆரோக்கியசாமி SDB அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திருப்பலிக்குப் பின்னர் அருட்தந்தை மைக்கிள் அவர்களுக்குப் பெயர் கொண்ட திருநாள் வாழ்த்து கூட்டமானது நடைபெற்றது. பங்குத் தந்தை ஆன்டனி ஜோஸ் அவர்களின் வழிகாட்டலில் வாழ்த்துரை வழங்கியும் கேக் வெட்டியும் வாழ்த்து பாடல் பாடியும் பரிசுகள் வழங்கியும் மக்கள் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்

செப்டம்பர் 29,2024 அன்று புனித வின்சென்ட் தே பவுல் சபையின் நிறுவனர் அருளாளர் பிரடரிக் ஓசானாம் மற்றும் பாதுகாவலர் புனித வின்சென்ட் தே பவுல் ஆகியோரின் திருநாள் சிறப்பு திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. உறுப்பினர்கள் அனைவரும் திருப்பலியில் கலந்து கொண்டதோடு உறுதிமொழி புதுப்பித்தல், காணிக்கை பவனி, மன்றாட்டு ஆகியவற்றில் சிறப்பாக கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் பங்கு மக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

செப்டம்பர் 29,2024 - அன்று சூசைபுரம் மற்றும் தக்கலை- பிலாங்காலை மறை வட்ட மேய்ப்பு பணிக்குழுவின் கூட்டம் சூசைபுரத்தில் வைத்து மறைவட்ட தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டவர்கள் மறைமாவட்ட நற்செய்தி கொண்டாட்டத்திற்கான ஆறு குழுக்களுக்களில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

செப்டம்பர் 30, 2024 - அன்று காலை 9 மணி முதல் மாலை 3:30 மணி வரை சூசைபுரம் மறைவட்ட பீடச் சிறுவர்களுக்கான சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

## கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

2024 செப்டம்பர் ஒன்றாம் தேதி முதல் எட்டாம் தேதி வரை 8 நோன்பு பங்கில் சிறப்பாக கடைபிடிக்கப்பட்டது. தினமும் காலை 6.30 மணிக்கு திருப்பலியும் மாலை 5.30 மணிக்கு கெபியில் ஜெபமாலையும் நடைபெற்றது. மாதாவின் பிறப்புத் திருநாளாம் எட்டாம் தேதி பங்கில் அனைத்து அன்னையர்களும் இணைந்து காணிக்கைப் பவனியில் கலந்து கொண்டதோடு திருப்பலியையும் சிறப்பித்தனர். மாலை ஆறு மணிக்கு சிறப்பு ஜெபமாலைப் பவனியும் நடைபெற்றது.

15 ஆம் தேதி ஓணப் பண்டிகை பங்கில் அனுசரிக்கப்பட்டது. வழக்கமாக நடைபெறும் மறைவட்ட நற்செய்தி கூட்டமானது 20 ஆம் தேதி வெள்ளி மாலை நடைபெற்றது. 22 ஆம் தேதி ஞாயிறு காலை திருப்பலியை தொடர்ந்து பங்கு பொதுமன்றம் நடைபெற்றது. 28 ஆம் தேதி சூசைபுரத்தில் ஆராதனை



சபை கன்னியர் இல்லத்தில் நடைபெற்ற நற்கருணை நற்செய்திப் பெருவிழாவில் பங்கிலிருந்து திரளான அன்னையர்கள் கலந்து கொண்டனர். உறவிய ஆண்டு விழாக்கள், செப்டம்பர் 22 புனித அந்தோனியார் உறவியமும் 28 இல் புனித அல்போன்சா உறவியமும் 29 இல் புனித அன்னைத் தெரெசா உறவியமும் தங்களது ஆண்டு விழாக்களை கொண்டாடின.

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

செப்டம்பர் 1, 2024 அன்று மறைக்கல்வி முடிந்தவுடன் ஆசிரியர்களுக்கான கூட்டம் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது.

செப்டம்பர் 1 முதல் 8 வரை மாதாவின் பிறப்பு விழாவை முன்னிட்டு சிறப்புத் திருப்பலி ஜெபமாலை நவநாள் நடைபெற்றன.

செப்டம்பர் 15, ஆலயத்திலுள்ள மக்கள் வாசிக்க புதிய நூலகம் அருட்தந்தை டோஜி அவர்கள் திறந்து வைத்தார். அன்றைய தினம் இளையோர்கள் சார்பாக ஆலய முன்தளத்தில் அத்தப்பூபோடப்பட்டன.

செப்டம்பர் 24, அன்று மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான ஜெபக்கூட்டம் பங்கு தந்தையின் தலைமையில் திருமதி பிரபா அவர்களது இல்லத்தில் வைத்து நடைபெற்றன.

செப்டம்பர் 29, அன்று புனித ஆரோக்கிய அன்னை உறவிய ஆண்டு விழா பங்கு தந்தையின் தலைமையில் நடைபெற்றன

### பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்

பாத்திமா அன்னை ஆலயத்தில் மாதாவின் பிறப்பு திருநாளை முன்னிட்டு செப்டம்பர் 01, 2024 முதல் தினமும் மாலையில் ஜெபமாலை நவநாள் மற்றும் திருப்பலி செப்டம்பர் 08, வரை நடைபெற்றது. செப்டம்பர் 08 அன்று நவநாள் மற்றும் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. திருப்பலி முடிந்த பிறகு ஜெபமாலைப் பவனி நடைபெற்றது. பவனி முடிந்த பிறகு மரியாயின் சேனை உறுப்பினர்களால் இனிப்பு வழங்கப்பட்டது.

### தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

ஆகஸ்ட் 27, 2024 முதல் ஆகஸ்ட் 29, 2024 வரை திருவிழாவிற்கு ஆயத்தமாக



நற்செய்தி பெருவிழா அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செப்டம்பர் 30 2024 வெள்ளிக்கிழமை மாலை 6:30 மணிக்கு பங்குதந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தலைமையில் திருக்கொடி ஏற்றத்துடன் ஆலய திருவிழா ஆரம்பம் ஆனது. செப்டம்பர் 1 2024 ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் பங்கு தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் இரண்டு குழந்தைகளுக்கு ஞானஸ்தானம் மற்றும் ஒரு மாணவனுக்கு முதல் திருவிருந்தும் வழங்கினார். செப்டம்பர் 5 2024 அன்று செவ்வாய்க்கிழமை மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வருகை தந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபித்தார். செப்டம்பர் 6 2024 ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை மாபெரும் மின் அலங்கார தேர்ப்பவனி நடைபெற்றது பங்கு தந்தையுடன் இணைந்து ஏராளமான இறை மக்கள் பங்கேற்றனர் செப்டம்பர் 8 ஞாயிற்றுக்கிழமை ராசா திருப்பலியும் தொடர்ந்து சமபந்தி விருந்தும் நடைபெற்றது. இத்திருவிழாவில் பங்குத்தந்தையுடன் இணைந்து அருட் சகோதரர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் கலந்து கொண்டு திருவிழாவினை சிறப்பித்தனர்.

### ▶ தூய தோமையார் ஆலயம் – மாதாபுரம்

செப்டம்பர் 01, 2024 அன்று மறைக்கல்வி முடிந்தவுடன் ஆசிரியர்களுக்கான கூட்டம் துணைப்பங்குத்தந்தை ஆன்டணி தகடியேல் தலைமையில் நடைபெற்றது.

செப்டம்பர் 5, 6, 7 தேதிகளில் மாதாவின் பிறப்பு விழாவை முன்னிட்டு ஜெபமாலை, ஆடம்பர திருப்பலி, நவநாள் நடைபெற்றன.

செப்டம்பர் 8, அன்று மாதாவின் பிறப்பு விழாவை முன்னிட்டு ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டன.

செப்டம்பர் 22, அன்று மறைக்கல்வி முடிந்தவுடன் பங்குத்தந்தை தலைமையில் மறைக்கல்வி பிள்ளைகளின் பொது கூட்டம் நடைபெற்றது. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

செப்டம்பர் 28, புனித குழந்தை தெரசா திருநாள் முன்னிட்டு உறவியத்தில் குடும்பம் வாரியாக செபமாலை செபிக்கட்டு வருகிறது.

## படந்தாலுமூடு

### ▶ திரு இருதய மறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு

ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளி அன்று காலை 10 மணி முதல் 12 மணி வரை நற்கருணை ஆராதனையும், மாலை 6 மணிக்கு திருப்பலியும்

அதைத்தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்று வருகிறது.

புனித கன்னி மரியாவின் பிறந்த நாளையொட்டி செப்டம்பர் 1 முதல் 8 வரை மாலை 6:00 மணிக்கு திருப்பலியும், அதை தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது. மரியாவின் பிறந்த நாளான செப்டம்பர் 8 அன்று மாலை 6 மணிக்கு ஜெபமாலை பவனி நடைபெற்றது. அதை தொடர்ந்து அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

செப்டம்பர் 15, அன்று திருவோணத்தை முன்னிட்டு திருப்பலிக்கு பின் இளைஞர்கள் சார்பாக அத்தப் பூ போடப்பட்டது. அதை தொடர்ந்து அனைவருக்கும் பாயாசம் வழங்கப்பட்டது.

செப்டம்பர் 29, அன்று புனித மிக்கேல் அதிதூதர் திருவிழாவை முன்னிட்டு புனித மிக்கேல் அதிதூதர் உறவிய மக்கள் திருப்பலியை சிறப்பித்தார்கள்.

செப்டம்பர் 01,2024 அன்று இளையோர்கள் பங்கில் உள்ள இரு நோயாளிகளை சந்தித்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்தார்கள்

### ▶ புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு

மரியாவின் பிறப்பு திருநாளை முன்னிட்டு ஆலயத்தில் செப்டம்பர் 1 முதல் 8 வரை அனுதினமும் திருப்பலி நடைபெற்றது. செப்டம்பர் 7 சனிக்கிழமை இரவு திருப்பலிக்கு பின் ஜெபமாலை திருப்பவனியும் நடைபெற்றது.

### ▶ புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

தெற்றியோடு புனித பவுல் ஆலய இறை மக்களை செப்டம்பர் 8, 2024 அன்று தக்கலை மறை மாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் சந்தித்தார்கள். அன்றைய தினம் ஆயர் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்கு பின் அனைத்து பக்த இயக்கங்களையும் சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டு அறிந்தார்கள்.

எட்டு நோன்பை முன்னிட்டு செப்டம்பர் 1 முதல் 8 வரை மாலை 6.30 மணிக்கு திருப்பலியும், அதைத்தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது.

செப்டம்பர் 14, ஓணப் பண்டிகையை முன்னிட்டு உறவியங்களுக்கு இடையேயான அத்தப்பூ போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.

### ▶ புனித வின்சென்ட் தே பவுல் ஆலயம் – மார்த்தாண்டம்

மார்த்தாண்டம் புனித வின்சென்ட் தே பவுல் ஆலயத் திருவிழா செப்டம்பர் 27, 2024 முதல் செப்டம்பர் 29, 2024 வரை நடைபெற்றது. செப்டம்பர் 28, அன்று ஆடம்பர திருப்பலி மற்றும் முதல் திருவிருந்தும் தக்கலை மறை மாவட்ட மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் ஒப்பு கொடுக்கப்பட்டது.

## நித்திரவிளை

### ▶ புனித ஜார்ஜியார் திருத்தலம் முன்சிறை

மாதாவின் பிறப்பு திருநாள் திருப்பலி 8.09.2024 இல் பங்கில் சிறப்பிக்கப்பட்டது. சிறப்பு காணிக்கை பவனி நடைபெற்றது. திருப்பலிக்கு பின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாதாவின் விண்ணேற்பு மற்றும் பிறப்பு விழா புனித அன்னை தெரேசா திருநாள், புனித எவுப்ராசியா திருநாள் ஆகியவற்றோடு பங்குதந்தையின் பெயர் கொண்ட புனிதரின் திருநாளும் சேர்ந்து ஐம்பெருவிழாவாக அன்றயை கூடுகை அமைந்தது.

செப்டம்பர் 29, 2024 அன்று புனித வின்சென்ட் - தே-பவுல் மற்றும் வாழ்த்தப்பட்ட பிரடெரிக் ஓசானாம் அவர்களின் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை திருப்பலி ஆடம்பரமாக ஒப்பு கொடுக்கப்பட்டது. அனைத்து வின்செந்திய உறுப்பினர்களும் இணைந்து காணிக்கை பவனி மற்றும் திருப்பலியை சிறப்பித்தனர்.

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

செப்டம்பர் 22,2024 அன்று "ஆயரோடு ஒருநாள்" என்ற நிகழ்வு நடைபெற்றது. அன்று காலை திருப்பலிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தக்கலை அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டு அதனை தொடர்ந்து ஆயர் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அன்று நான்கு மாணவர்கள் முதல்முறையாக இறைமகன் இயேசுவை பெற்றுக் கொண்டனர். பதினாறு மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருளடையாளத்தையும் பெற்றுக் கொண்டனர். திருப்பலிக்கு பின் அனைத்து மக்களோடும் ஆயர் அவர்கள் கலந்துரையாடி கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். பின்பு எல்லா பக்த இயக்கங்களையும் பார்வையிட்டு ஒவ்வொரு இயக்கங்கள் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டதோடு இயக்க வளர்ச்சிக்காக பல அறிவுரைகளையும் கூறினார்கள். பின் எல்லா இயக்கங்கள் மற்றும் ஆலயத்தின் செயல்பாட்டு

ஏடுகளையும் பார்வையிட்டு சரி பார்த்தார்கள். பின்பு அன்பின் விருந்துண்டு மகிழ்ந்தார். அனைத்து மக்களையும் சந்தித்து, நோயாளிகளை சந்தித்து அவர்களோடு உரையாடி அவர்களோடு தங்களுடைய உடன் இருப்பை பகிர்ந்து கொண்டார்கள். ஆயருடன் பகிர்ந்து கொண்ட ஒரு நாள் இறை மக்களின் விசுவாசத்திற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

### ▶ புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை

செப்டம்பர் 14, 2024 அன்று ஓணப் பண்டிகை இளைஞர் இயக்கம் சார்பில் சிறப்பாக நடைபெற்றது. அத்தப்பூ, வடமிழுத்தல், உறியடி மற்றும் பல விளையாட்டுப் போட்டிகள் அனைவரையும் கவரும் விதமாக அமைந்தது. 29ஆம் தேதி வின்சென்ட் தே பவுல், இளைஞர் இயக்கம், மறைக்கல்வி ஆகியவை சார்பில் காணிக்கை கொண்டுவரப்பட்டு அதனை முதியோர் இல்லம் - முஞ்சிறை அன்பகத்திற்கு வழங்கப்பட்டது. மேலும் மாதர்ஜோதிஸ் இயக்கம் சார்பில் ஒருநாள் கருத்தரங்கு மாலை 3.30 மணி முதல் 5.30 மணி வரை நடைபெற்றது.

### ▶ தூய அமல மரியா ஆலயம் – சீனிவிளை

தூய அமல மரியா ஆலய 24 வது திருவிழா மற்றும் பங்கு குடும்ப விழாவும் 02 - 09- 2024 முதல் 8 - 9 - 2024 முடிய 7 நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் மேதகு ஆயர் அவர்கள் கொடியேற்றி ஆடம்பர திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்கள். முதல் மூன்று நாட்கள் அருட்தந்தை ஜான் ஜோசப் மற்றும் குழுவினரால் (புனித ஜார்ஜியார் ஆலயம் மேக்கரை தென்காசி) நற்செய்தி பெருவிழா மற்றும் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. ஐந்தாம் நாள் இறந்தவர்களுக்காக நினைவு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் அனைத்து பக்தி இயக்கங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது.

### ▶ ஜெயமாதா ஆலயம் – நித்திரவிளை

மாதாவின் பிறப்பு திருநாள் திருப்பலி மிக ஆடம்பரமாக ஒப்பு கொடுக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது. அனைத்து இறை மக்களும் காணிக்கை பவனி சிறப்பித்தனர். செப்டம்பர் 29, 2024 அன்று புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் வாழ்த்தப்பட்ட பிரடரிக் ஓசானாம் திருநாள், திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபித்து இறையாசீர் பெற்று சென்றனர்.

### ▶ புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

செப்டம்பர் 1, 2024 அன்று புனித எவுப்ராசியா அம்மாவின் திருவிழாவை அவ்வுறவிய மக்கள் ஆலயத்தில் வைத்துச் சிறப்பித்தார்கள். திருப்பலிக்குப் பின்னர் பங்குமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. மாலையில் திரு. விஜயராஜ் அவர்களின் வீட்டில் வைத்து பாதுகாவலர் தினவிழா செபம், கலைநிகழ்ச்சிகள், உணவு ஆகியவற்றுடன் சிறப்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் மறைக்கல்வியை பார்வையிடுவதற்காக, மறைக்கல்வி நடுவண் மையத்திலிருந்து திரு. ஷோணிக் ரீகன் அவர்கள் வருகைப்புரிந்தார்கள்.

மாதாவின் பிறப்புத் திருவிழாவை முன்னிட்டு, 1 முதல் 8 வரை சிறப்பு ஜெபமாலை மற்றும் திருப்பலி மாலை வேளையில் நடைபெற்றது. பிறப்புத் திருவிழா அன்று, திருப்பலி, மறைக்கல்விப் பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகள், உணவு ஆகியவை இடம் பெற்றன. அன்றைய தினம் மறைக்கல்வி வகுப்புகள் மாலை 3.45 முதல் 5 வரை நடைபெற்றது.

செப்டம்பர் 15 ஆம் தேதி ஓணப்பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. உறவிய வாரியாக அத்தப்பூ போட்டிகள், இளையோரால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள், ஒண விருந்து ஆகியவை இடம் பெற்றன.

செப்டம்பர் 22 ஆம் தேதி, வின்செண்ட்-தே-பவுல் சங்கத்தார் திருப்பலிச் சிறப்பித்து சிறப்புக் காணிக்கைப் பவனி நடத்தினர்.

செப்டபர் 29 ஆம் தேதி, மாதர் ஜோதிஸ் சங்கம் சார்பில் உணவு விழா திருப்பலிக்குப் பின்னர் நடத்தப்பட்டது. இதில் மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் இயக்குநர் தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில், பங்கின் முன்னாள் பங்குத்தந்தை பிரின்டோ குரியாஸ் ஆகியோர் வருகைப் புரிந்தார்கள். மறைமாவட்ட இயக்குநர் நிகழ்வைத் தொடங்கி வைத்தார். அன்றைய தினம் மறைக்கல்வி பிற்பகல் 3.35 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணிக்கு முடிவடைந்தது.

## பிலாங்காலை



### ▶ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி தொடர்ந்து ஆராதனை நடைபெறுகிறது. செப்டம்பர் மாதம் 8 நோன்பு கடைப்பிடிக்கப்பட்டு மாதா பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. தினமும் காலையில் ஆராதனை தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா I திருமதி ஹேமா I திருமதி செலின் மேரி I திருமதி ஷீலா, திருமதி ஷைலா I திருமதி ராஜிதா**

| BIRTHDAY OF REV. FATHERS - OCTOBER- 2024 | |
|---|---|
| FR. AJIN C JOSEPH | 04 |
| FR. LINTOMON THAKIDIEL | 05 |
| FR. JOHN JOSEPH | 17 |
| FR. KURIAN MATHEW KOIPURAM | 20 |
| FR. JOSEPH (BIBIN) KOCHEETHARA | 26 |
| FR. AUGUSTINE THALODIL | 27 |
| FR. JOSE ALBERT CMI | 27 |

| FEASTDAY OF REV. FATHERS-OCTOBER- 2024 | |
|---|---|
| FR. SHOJI PUTHENPURACKAL | 09 |
| FR. STANLEY CHELLIYIL CMI | 14 |
| FR. LUKA KOLLAMPARAMPIL CMI | 18 |
| FR. JOHN PAUL PUTHUVALPUTHEN | 22 |
| | |

## MONTHLY AGENDA –OCTOBER 2024

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | 10.00 am<br>10.00 am | **SINAI: Intercessory prayer @ Kalluvilai**<br>**VOC : Vocation Camp @ Kaliyal & Manjalummoodu Foranes** |
| 2 | Wed | 09.00 am<br>9.30 am<br>10.00 am<br>04.00 pm | **KKSSS : KKSSS General Body Meeting**<br>**VP : Cleaning Camp @ Idaicode Govt. Hospital**<br>**VOC : Vocation Camp @ Nithiravilai & Padanthalummoodu Foranes EC : Drug Addiction Awareness rally @ Plankalai** |
| 3 | Thu | 10.00 am | **CML : Forane Directors Meeting** |
| 4 | Fri | 10.00 am<br>04.00 pm | **SINAI : One day Convention @ Vattakottai Mar Mathew Kavukattu Requiem Holy Qurbana @ Changanachery** |
| 5 | Sat | 10.00 am<br>10.00 am | **URAVIUM : Forane Animators Meet @ Bishop's House**<br>**VOC : Vocation Camp @ Arukai Forane** |
| 6 | Sun | 04.00 pm<br>02.00 pm<br>02.00 pm<br>02.00 pm | **LAITY : Diocesan Level Executive Meeting @ Kalluvilai CML : Leaders meet of Nithiravilai Padanthalummoodu Foranes FA : Parish Visit MS : Regional Meeting @ Kottar Bishop's House** |
| 7-11 | Mon<br>Fri | | Annual Retreat for priests |
| 8 | Tue | 10.00 am | **SINAI : Intercessory prayer @ Kallu-vilai** |
| 11 | Fri | 10.00 am<br>10.00 am | **KKSSS : Educare Class @ Kalluvilai**<br>**FA : Marriage Preparation Course** |

| | | | |
|---|---|---|---|
| 12 | Sat | 10.00 am<br>10.00 am<br>03.00 pm<br>03.00 pm<br>06.30 pm | **KKSSS : Educare Class @ Kalluvilai FA : Marriage Preparation Course SMYM : Annual Day@ Padanthalummoodu MS : Executive Meeting @ Padanthalumoodu SINAI : Evening Retreat @ Malaicode** |
| 13 | Sun | **10.00 am<br>02.00pm<br>02.30pm** | **FA : Marriage Preparation Course / Parish Visit Rosary Procession @ Tenkasi VP: Area Council Meeting @ Forane Centers KII : Visiting sick and praying Rosary in all units** |
| 14 | Mon | 10.00 am<br>02.00 pm<br>03.00 pm | **Meeting Sinai Retreat Center Team @ Bishop's House**<br>**Meeting with College of Consultors @ Bishop's House**<br>**EC : UCC Monthly Meeting** |
| 15 | Tue | 10.00 am | **SINAI : Intercessory prayer @ Kallu-vilai** |
| 16 | Wed | 10.00 am<br>10.00 am<br>10.00 am | **Meeting Pulari Press Director and Staffs @ Bishop's House KKSSS : World food day celebration at 5 centers KKSSS : Save a family cluster level meeting @ Athencode** |
| 18 | Fri | 10.00 am<br>02.30 pm<br>06.30 pm | **Departmental Meetings @ Bishop's House Assembly Drafting committee meeting @ Bishop's House**<br>**SINAI : Evening Retreat @ Palappallan** |
| 19 | Sat | 10.00 am<br>10.00 am<br>10.00 am | **KKSSS : Save family cluster level meeting @ Kazhuvanthittai**<br>**KKSSS : Horticulture training Program @ Pilankarai**<br>**FA : Kaliyal Forane Workshop** |
| 20 | Sun | 02.00 pm<br>02.00 pm<br>03.00 pm | **Mission Sunday HEALTH : Awareness program on addiction and Parenting @ Mankarai FA : Bible Sentence writing competition / Parish Visit MC : Comitium Meeting @ Padantnalummoodu** |

| | | | |
|---|---|---|---|
| 21 | Mon | 10.00 am<br>02.30 pm<br>05.00 pm | **Meeting with KKSSS Director and staffs @ Bishop's House**<br>**Meeting with Sinai Theological Director and staffs @ Bishop's House**<br>**EC : UCC Karungal Center Meeting @ Karungal** |
| 22 | Tue | 10.00 am | **SINAI : Intercessory prayer @ Kalluvilai** |
| 23 | Wed | 10.00 am | **HEALTH : Training program for parents of Special school Children @ Palappallam** |
| 26 | Sat | 10.00 am<br>10.00 am | **FA : Arukani Forane Visit by Director**<br>**SINAI : One day Special Retreat @ Kalluvilai** |
| 27 | Sun | 02.00 pm | **Diocesan Rosary Procession from Chenamcode to Kulashekaram** |
| 28 | Mon | 02.30 pm | **Meeting with Diocesan Choir Ministry @ Bishop's House** |
| 29 | Tue | 10.00 am<br>10.00 am | **SINAI : Intercessory prayer @ Kalluvilai**<br>**KKSSS : Drug Addiction Awareness class @ Chenamcode** |
| 31 | Thu | 09.00 am | **Installation of Bishop Mar Thomas Tharayil @ Changancherry** |

VERY REV. FR, THOMAS POWATHUPARAMPIL
VICAR GENERAL

# BISHOP'S ENGAGEMENTS – October 2024

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | **6.00 pm** | **Annikarai : Feast day Qurbana** |
| 2 | Wed | 09.00 am<br>04.00 pm<br>06.00 pm | **Kalluvilai : KKSSS General Body Meeting Plankalai : UCC De Addiction rally Manjalummoodu : Feast day Qurbana** |
| 3 | Thu | 04.00 pm | **Changanacherry : Mar Mathew Kavukattu Requiem Holy Qurbana** |
| 4 | fri | 10.00 am<br>06.00 pm | **Thuckalay : Benefactors Visit**<br>**Kattathurai : Feast day Qurbana** |
| 5 | Sat | 10.00 am<br>03.00 pm | **Thuckalay : Uravium animators meeting**<br>**Thuckalay : Curia Meeting** |
| 6 | Sun | 08.00 am | **Plankalai : Feast day Qurbana** |
| 7-11 | Mon Fri | | **Sangamam : Annual Retreat for Priests** |
| 12 | Sat | 03.00 pm | **Padanthalummoodu : SMYM Annual Day** |
| 13 | Sun | 02.00 pm | **Tenkasi : Rosary Procession** |
| 14 | **Mon** | 10.00 am<br>02.00 pm | **Thuckalay : Meeting Sinai Retreat Center Team**<br>**Thuckalay : Meeting with College of Consultors** |
| 15 | Tue | 10.00 am | **Karungal : Gandhian Seminar @ Mangalakuntru College** |
| 16 | Wed | 10.00 am<br>04.00 pm | **Thuckalay : Meeting Pulari Press Director and Staffs**<br>**Mukkoottukal : Visit to Minor Seminary** |

| | | | |
|---|---|---|---|
| 17 | Thu | 10.00 am | **Visit to Extended Territories** |
| 18 | Fri | 10.00 am<br>02.30 pm | **Thuckalay : Departmental Meetings**<br>**Thuckalay : Assembly Drafting committee meeting** |
| 19 | Sat | 10.00 am<br>06.00 pm | **Azhakiyamandapam : FCC first profession**<br>**Thuckalay :Doctors Meet** |
| 20 | Sun | 07.00 am | **Health Commision Visit to Palayam-kottai and Thoothukudi** |
| 21 | Mon | 10.00 am<br>02.30 pm | **Thuckalay : Meeting with KKSSS Director and staffs**<br>**Thuckalay : Meeting with Sinai Theological Director and staffs** |
| 22-26 | **Tue-Sat** | | **>> to Goa** |
| 27 | Sun | 10.00 am<br>03.00 pm | **Kulashekaram : Diocesan Rosary Procession Meeting with Eparchial Convention Committee** |
| 28 | Mon | 10.00 am<br>02.30 pm | **Thuckalay : Curia Meeting**<br>**Thuckalay : Meeting with Diocesan Choir Ministry** |
| 29 | Tue | 10.00 am<br>05.00 pm | **Thuckalay : Meeting with Education Commission Department**<br>**Chennamcode : Assisi Vidyalaya Annual Day** |
| 30 | Wed | 10.00 am | **Thuckalay : Meeting with priests above 20 years** |
| 31 | Thu | 09.00 am | **Changancherry : Installation of Bishop Mar Thomas Tharayil** |

FR. LIJU MATHEW, SECRETARY TO BISHOP



Pastoral Visit
September 08, 2024, Thettiyode



Grotto Blessing , September 13, 2024,
St. Mary's Minor Seminary, Mukkutukal



Prayer Meeting , September 22, 2024,
Lalakudiyiruppu, Tenkasi Mission



Priests' Conference
September 03, 2024, Kalluvilai



Laity Commission New Office Blessing
September 10, 2024, Kalluvilai

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570